


தீரன் சின்னமலை



காலிங்கராயன்

# கொங்கு நண்பர்கள் சங்கம்

சென்னை - 600 014.



விழாத் தலைவர்
கொங்குமாமணி
டாக்டர். **என்.எம்.வீரய்யன்**
வேந்தர், சவிதா பல்கலைக்கழகம்



**கொங்குமாமணி** விருதுபெறும்
டாக்டர். **நல்ல ஜி.பழனிசாமி** தலைவர்
கோவை மருத்துவ மைய மருத்துவமனை (KMCH)
மற்றும் டாக்டர். என்.ஜி.பி. கல்வி நிறுவனங்கள்



செயலாளர்
திரு. **கே.கே.ரமேஷ்**



தலைவர்
திரு. **பரணி கே.பாலசுப்பிரமணி**



பொருளாளர்
திரு. **வி.பி.செங்கோட்டுவேலு**

# குடும்ப விழா சிறப்பு மலர் - 2013

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

'கொங்கு மாமணி' விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட சான்றோர்கள்

**2001 ஆம் ஆண்டு**

1. தெய்வத்திரு.கே.எம்.சென்னியப்பன்
2. டாக்டர். பழனி ஜி.பெரியசாமி
3. திரு. ஜெம் ஆர். வீரமணி

**2002 ஆம் ஆண்டு**

4. திரு. எஸ்.வி.பாலசுப்பிரமணியம்
5. திரு. இரா. காந்தி

**2003 ஆம் ஆண்டு**

6. திரு. டி.ஆர்.கார்த்திகேயன், I.P.S. (Retd.)
7. திருச்சி. ஆர். தேவராசன்
8. திரு. ஜி.ஆர்.சுந்தரவடிவேல்

**2004 ஆம் ஆண்டு**

9. முனைவர் சிலம்பொலி சு.செல்லப்பன்
10. டாக்டர் சி.பழனிவேலு
11. டாக்டர். பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்

**2005 ஆம் ஆண்டு**

12. NSIT. திரு. எம்.முருகேசன்
13. திரு. கே.பழனியப்பன்
14. திரு.சி.கே.இராமசாமி

**2006 ஆம் ஆண்டு**

15. திரு.நல்லா கோவிந்தசாமி
16. சக்திமசாலா திரு.பி.சி.துரைசாமி
17. திரு. வி.கே.தங்கவேல்

**2007 ஆம் ஆண்டு**

18. புலவர் செ.இராசு
19. திரு. பெஸ்ட் எஸ்.இராமசாமி
20. பத்மஸ்ரீ டாக்டர். க.ரா.பழனிசாமி

**2008 ஆம் ஆண்டு**

21. ஆடிட்டர் மு.பாலசுப்பிரமணியம்
22. டாக்டர் என்.எம்.வீரய்யன்
23. தெய்வத்திரு. ப.செங்கோடன்

**2009 ஆம் ஆண்டு**

24. டாக்டர் வி.எஸ்.நடராஜன்
25. திரு.கே.செல்லமுத்து
26. பத்மஸ்ரீ ஏ.சக்திவேல்

**2011 ஆம் ஆண்டு**

27. அட்லஸ் எம்.நாச்சிமுத்து
28. கே.ஏ.செங்கோட்டுவேல்

**2012 ஆம் ஆண்டு**


29. கலைமாமணி சிவகுமார்

**"கொங்குமாமேதை" விருது பெற்றவர்**

அருட்செல்வர் டாக்டர். நா.மகாலிங்கம்

(2006 ஆம் ஆண்டு)

# கொங்கு மாமணி



## டாக்டர் நல்ல ஜி.பழனிசாமி

ஈரோடு மாவட்டம் நல்லாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. நல்லாக் கவுண்டர் – திருமதி இளையம்மாள் தம்பதியரின் மகனாக 1941 ஆம் ஆண்டு எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர், டாக்டர் நல்ல ஜி.பழனிசாமி. 700 படுக்கைகள் கொண்ட உலகத்தரம் வாய்ந்த KMCH மருத்துவ மனையையும், கோவை மருத்துவ மைய ஆராய்ச்சிக் கல்வி அறக்கட்டளை துவக்கி, அதன்வழி பல்வேறு கல்வி நிறுவனங்களையும் நிறுவிய பெருமைக்குரியவர், இவர்.

ஆரம்பக் கல்வியை நல்லாம்பட்டி தொடக்கப் பள்ளியிலும், மேல் நிலைப் பள்ளிக் கல்வியைப் பெருந்துறை அரசுப் பள்ளியிலும், இளம்கலைப் படிப்பைக் கோவை PSG Arts & Science கல்லூரியிலும் முடித்த இவர், சென்னை ஸ்டேன்லி மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து M.B.B.S மற்றும் M.D பட்டங்களைப் பெற்றார்.

1973 ஆம் ஆண்டு முதல் 1975 ஆம் ஆண்டு வரை கோவை மருத்துவக் கல்லூரியில் சிறப்பாகப் பணியாற்றினார். 1975 ஆம் ஆண்டு அமெரிக்கா சென்று சின் சினாட்டி, ஒஹேயோ மற்றும் வேய்ன் ஸ்டேட் பல்கலைக் கழகங்களில் மருத்துவ உயர் படிப்பைச் சிறப்புற முடித்த பின்னர், 1978 ஆம் ஆண்டு முதல் 1983 ஆம் ஆண்டு வரை அமெரிக்காவிலுள்ள செயின்ட் ஜோசப் மருத்துவ மனையில் பணியாற்றினார். 1983 ஆம் ஆண்டு முதல் 1985 ஆம் ஆண்டுவரை டெட்ராய்டு வேய்ன் ஸ்டேட் பல்கலைக் கழகத்தில் நாளமில்லாச் சுரப்பி மற்றும் மெட்டபாலிசத்தில் சிறப்புமிக்க உயர் படிப்பை முடித்து, இத்துறையில் சிறந்த நிபுணராய் விளங்கினார்.

கொங்கு மண்டலத்திற்கு உலகத்தரமான மருத்துவச்சேவை ஆற்றிட வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன், இந்தியா திரும்பி அயல்நாடு வாழ் இந்தியர்களுடன் ஒன்றிணைந்து 1990 ஆம் ஆண்டு கோவை மருத்துவ மைய மருத்துவ மனையைத்

தொடங்கினார். தன்னுடைய அரிய ஆற்றலாலும், திறமையாலும் 200 படுக்கை வசதிகளுடன் தொடங்கப்பட்ட இம்மருத்துவ மனையைத் தற்போது 800 படுக்கை வசதிகள் கொண்ட, அதிநவீன மருத்துவ வசதிகளுடன் அனைத்து நோய்களுக்கும் தரமிக்க சிகிச்சையளிக்கும் சிறந்த நிறுவனமாக மேம்படுத்திச் சாதனை படைத்துள்ளார். இம் மருத்துவ மனையில் 200 படுக்கை வசதிகளுடன் அதிநவீன புற்றுநோய் ஆராய்ச்சி மையம் தொடங்கப்பட்டுச் சிறப்பாகச் செயல்பட்டு வருவதும், 150 படுக்கை வசதிகள் கொண்ட இரண்டு மருத்துவ மனைகள் ஈரோடு நகரில் தொடங்கப்பட்டு அரிய சேவையாற்றி வருவதும், இவருடைய போற்றத்தக்க மருத்துவச் சேவைக்குப் பெருமை சேர்ப்பதாக உள்ளன.

தரமான கல்வியை, குறைந்த செலவில் அளித்திட KMCH இயல்முறை கல்லூரி, KMCH தொழில் முறை கல்லூரி, KMCH மருந்தியல் கல்லூரி, KMCH மருத்துவமனைப் படிப்புகள் கல்லூரி, Dr. NGP கலை மற்றும் அறிவியல் கல்லூரி, Dr. NGP கல்வியியல் கல்லூரி, Dr. NGP ஆசிரியர் பயிற்சி நிறுவனம், Dr. NGP பொறியியல் கல்லூரி, Dr. NGP சமுதாயக் கல்லூரி, NGP பள்ளி முதலான கல்வி நிறுவனங்களைத் துவக்கி, சுமார் 10,000 மாணவர்கள் கல்வி பயில வழிவகை செய்து, கல்விச் சேவையாற்றி வருகிறார்.

இவையன்றி, AOSTA Software Technology என்னும் மென்பொருள் நிறுவனத்தைத் தொடங்கி மருத்துவத் துறைக்கான சிறந்த மென்பொருள்களை உருவாக்கியுள்ளார். இந்நிறுவனம் உருவாக்கிய BACK BONE எனும் மென்பொருள் நாடெங்கிலும் 100 க்கும் மேற்பட்ட மருத்துவமனைகளில் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மருத்துவப் பணி, கல்விப்பணி மட்டுமல்லாது சமூக சேவையிலும் சிறந்து விளங்குகிறார், டாக்டர் பழனிசாமி. கோவை மருத்துவ மைய மருத்துவமனை சார்பில் ஏழைகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சை, கிராமப்புறப் பெண்களுக்காகச் சமூக நல மையங்கள், அவசரகால சிகிச்சை மற்றும் முதலுதவி மையங்கள், பெருந்துறை அரசுப் பள்ளி மாணவர்களுக்குக் கணினி, நல்லாம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ரூ ஒரு கோடி செலவில் புதிய பள்ளிக் கட்டடம், பல பள்ளிகளுக்கு நவீன கழிவறைகள், திருக்கோயில்களைப் புனரமைக்க நிதி உதவி, மாணவ, மாணவியருக்குக் கல்வி உதவித் தொகை மற்றும் ஊக்கத்தொகை, பரிசுகள் வழங்குதல், கோவை வீரியம் பாளையத்தில் KMCH சமூக மருத்துவ மையம், காளப்பட்டியில் ரூ 3 கோடி செலவில் மின் மயானம் போன்றவை இவருடைய சிறப்பான சமூகசேவைகளுள் குறிப்பிடத்தக்கன.

தமிழ்ப்பணியிலும் ஈடுபட்டு, கடந்த மார்ச் மாதம் தமிழ்ப் பண்பாட்டு மையம் என்ற அமைப்பை நிறுவியுள்ளார். சிறந்த மூன்று தமிழறிஞர்களுக்கு விருது, பரிசு மற்றும் பாராட்டு, கொங்கு ஆய்வு நூல்கள் வெளியீடு முதலான பணிகளைச் செய்துவருகிறார்.

கோவை மருத்துவ மைய மருத்துவமனை மற்றும் Dr. NGP கல்வி நிறுவனங்கள் மூலம் 6000க்கும் மேற்பட்ட கொங்கு சமூக மக்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ள இவர், ஆண்டுதோறும் கொங்குச் சமூதாய மக்களுக்கு ரூ 4 கோடி வரை மருத்துவ உதவிகளை வழங்கியுள்ளார். கல்வி நிறுவனங்களில் கொங்கு மாணவர்களுக்குக் கல்விக் கட்டண சலுகை, கல்வி உதவித் தொகை, கல்வி ஊக்கத்தொகை முதலியன ஆண்டுதோறும் வழங்கி வருகிறார்.

இவருடைய ஒப்பற்ற சாதனைகளையும், அரிய சேவைகளையும் பாராட்டி எண்ணற்ற விருதுகள் இவருக்கு வழங்கப்பட்டுள்ளன. ரோட்டரி கோவையின் கேலக்ஸி விருது, 2011 ஆம் ஆண்டு பாரதியார் பல்கலைக்கழகத்தின் மதிப்புறு முனைவர் பட்டம், 2012 ஆம் ஆண்டு Dr. MGR மருத்துவப் பல்கலைக் கழகத்தின் 'வாழ்நாள் சாதனையாளர்' விருது ஆகியன அவற்றுள் குறிப்பிடத்தக்கனவாகும்.

டாக்டர் நல்ல பழனிசாமி அவர்களின் சாதனைகளுக்கு, உறுதுணையாக விளங்குபவர் மனைவி டாக்டர் தவமணிதேவி பழனிசாமி. குழந்தைகள் நல மருத்துவத்தில் நிபுணரான இவர், கோவை மருத்துவ மையத்தின் நிர்வாக இயக்குநராகவும், Dr. NGP கல்வி நிறுவனங்களின் செயலாளராகவும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். இத்தம்பதியருக்கு டாக்டர். மோகன் சேதுபதி பழனிசாமி, டாக்டர். (செல்வி) பூரணி பாவை பழனிசாமி, டாக்டர் அருண் பழனிசாமி ஆகிய இரண்டு மகன்களும் ஒரு மகளும் உள்ளனர். மூவரும் அமெரிக்காவில் மருத்துவர்களாகப் பணிபுரிந்து வருகின்றனர்.

அமெரிக்காவில் மருத்துவத்துறையில் உயர்கல்வி பயின்று அங்குள்ள புகழ்பெற்ற மருத்துவ மனைகளில் சிறப்பாகப் பணியாற்றி, தமிழகத்திற்கு, குறிப்பாக கொங்கு மண்டலத்திற்குத் தன்னுடைய சேவை பயன்பட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன், கோவையில் உலகத்தரம் வாய்ந்த மருத்துவ மனையை நிறுவியதோடு, சிறப்புமிக்க கல்வி நிறுவனங்களையும் தொடங்கி, சிறந்த மருத்துவர், கல்வியாளர், தமிழ்ப் புரவலர், கொங்குச் சமுதாயச் சிந்தனையாளர், மனிதநேய மாண்பாளர் போன்ற பன்முகங்கள் கொண்டு கொங்குச் சமுதாயம் பெருமைப்படும் அளவில் பல சாதனைகளைப் படைத்து, சமுதாய முன்னேற்றத்திற்கும், மக்களின் நல வாழ்விற்கும் உன்னதமாய்ப் பணியாற்றியமைக்காக, கோவை மருத்துவ மையத்தின் தலைவர் டாக்டர் நல்ல ஜி. பழனிசாமி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்குமாமணி' விருது வழங்கிக் கௌரவித்து பெருமை கொள்கிறது.

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

2012 ஆம் ஆண்டு "கொங்கு சாதனையாளர்" விருது
வழங்கிச் சிறப்பிக்கப்பட்டவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | டாக்டர். கே.கே.லட்சுமணன் | கோவை | சிறந்த சமுதாயப்பணி |
| 2. | திரு. கே.சி.கருப்பன் | நாமக்கல் | சிறந்த கல்விப்பணி |
| 3. | டாக்டர்.கே.அர்த்தநாரி | சேலம் | சிறந்த மருத்துவப்பணி |
| 4. | திரு. என்.சின்னசாமி | கோவை | சிறந்த தொழிலதிபர் |
| 5. | திரு.க.நல்லத்தம்பி | நாமக்கல் | சிறந்த சாலைப் போக்குவரத்து மற்றும் சமுதாயப்பணி |
| 6. | திரு. எம்.மணி | ஈரோடு | சிறந்த தொழிலதிபர் |
| 7. | திரு. கே.முத்துசாமி | கரூர் | சிறந்த சமுதாயப்பணி |
| 8. | திரு. டி.சங்கர் | சென்னை | சிறந்த இந்திய ஆட்சி கல்விப்பணி |
| 9. | திரு. கிருபா புஷ்பராஜ் | சென்னை | சிறந்த வழக்கறிஞர் (Patent Attorney, USA) |
| 10. | திரு. ஆர்.ராமச்சந்திரன் | கிருஷ்ணகிரி | சிறந்த ஐ.ஏ.எஸ்.தேர்வு பெற்றமை |

## பிற சாதனையாளர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு. தூரன் கருணாகரன் இராமசாமி | வெளிநாடு கொங்கு சாதனையாளர் |
| 2. | திரு. கே.வி.துரைசாமி | கொங்கு வேளாண் சாதனையாளர் |
| 3. | திரு. மது (எ) டி.இராமகிருஷ்ணன் | கொங்கு வேளாண் சாதனையாளர் |
| 4. | திரு. எஸ்.உமாபதி | கொங்கு வேளாண் சாதனையாளர் |
| 5. | செல்வன். கே.எம்.சித்தார்த் | கொங்கு இளம் சாதனையாளர் |
| 6. | செல்வன். பி.மனோஜ் | கொங்கு இளம் சாதனையாளர் |

# கொங்கு சாதனையாளர்



## திருமதி சாரதாமணி சின்னசாமி

தமிழறிஞர் பத்மபூஷன் திரு. பெரியசாமித் தூரன் அவர்களைத் தமிழகம் நன்கு அறியும். முத்தமிழின் துறைகள் இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றிலும், அவருடைய முத்தான படைப்புகள் பலவற்றைத் தமிழன்னைக்குச் சிறந்த அணிகலன்களாகச் சூட்டியவர். இமாலயப் பணி என்று புகழப்படும் கலைக் களஞ்சியத்தை உருவாக்கிச் சாதனை படைத்தவர். கொங்குச் சமுதாயத்திற்குப் பெரும் பெருமை சேர்த்ததோடு, நாடு போற்றும் நாவலராகத் திகழ்ந்த, கொங்கு நாட்டுத் தங்கமான இவர், கொங்குச் சமுதாயத்தின் மேல் கொண்டிருந்த பற்றுக் காரணமாக, தன்னுடைய பெயரில் தூரன் எனும் குலப்பெயரையும் சேர்த்துக் கொண்ட சிறப்புப் பெற்றவர்.

இத்தகைய அரும் பெரும் சிறப்புகள் கொண்ட தூரன் அவர்களுடைய செல்வ மகள் தான், திருமதி சாரதாமணி சின்னசாமி. 52 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்டு, சீரோடும் சிறப்போடும் வெற்றிநடை போட்டு வருகின்ற நமது சங்கத்தின் முதல் பெண் செயற்குழு உறுப்பினர் என்ற பெருமையைப் பெற்றுள்ளவர் இவர். சங்கத்தின் வளர்ச்சியிலும், செயல்பாடுகளிலும் தீவிர ஈடுபாடு கொண்டுள்ள இவர், சங்கத்தின் தொடக்கக் காலத்திலிருந்து புது உறுப்பினர்களை ஆர்வத்தோடு சேர்த்து வந்துள்ளார். சமுதாயப் பணியாற்ற விழையும் கொங்கு மகளிருக்கு இவர் ஒரு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கிறார் என்றால் அது மிகையல்ல.

திருமதி சாரதாமணி சின்னசாமி அவர்கள் ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி அருகிலுள்ள மஞ்சக்காட்டு வலசு என்னும் கிராமத்தில் 1941 ஆம் ஆண்டு பிறந்தவர். தாயார் பெயர் திருமதி காளியம்மாள். திருமதி சாரதாமணி அவர்களுடன் பிறந்தவர்கள் இரண்டு சகோதரிகள் மற்றும் ஒரு சகோதரர்.

பள்ளிப் படிப்பை சென்னை பெசன்ட் உயர்நிலைப் பள்ளியிலும், இண்டர்மீடியேட் படிப்பை சென்னை ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியிலும் முடித்தார். பள்ளிப்படிப்போடு, பத்து வயதிலிருந்தே இசையை முறையாகக் கற்க ஆரம்பித்தார். வித்வான் கும்பகோணம்


விஸ்வநாதன், சங்கீத கலாநிதி T.K. கோவிந்தராவ் ஆகியோரிடம் இசையைக் கசடறக் கற்றுத் தேர்ச்சி பெற்றார். 1962 ஆம் ஆண்டு சென்னையிலுள்ள தமிழக அரசு இசைக் கல்லூரியில் சேர்ந்து, சங்கீத வித்வான் பட்டத்தைப் பெற்றார். அப்போது இசைக் கல்லூரியின் முதல்வராய்ப் பணியாற்றிய சங்கீத கலாநிதி முசிறி சுப்ரமணிய ஐயர் அவர்களின் பாராட்டைப் பெற்று, கல்லூரியின் சிறந்த மாணவியாகத் திகழ்ந்தார்.

இவருடைய திருமணம் 1961 ஆம் ஆண்டு மிகச்சிறப்பாக நடைபெற்றது. இவருடைய கணவர் சென்னை உயர்நீதி மன்ற, புகழ்பெற்ற முதுநிலை வழக்கறிஞர் திரு. சி. சின்னசாமி அவர்கள். கண்ணன் கூட்டத்தைச் சேர்ந்தவர். இத்தம்பதியரின் ஒரே மகன், சென்னையில் சிறந்து விளங்கும் பல் மருத்துவ நிபுணர்களுள் ஒருவராக விளங்கும் டாக்டர் சி. செல்வமுத்து குமார். தாய் மூகாம்பிகை மருத்துவக் கல்லூரியில் பல் மருத்துவத் துறைத் தலைவராகவும், பேராசிரியராகவும் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். மேலும் அடையாறு சாஸ்திரி நகரில் நவீன கருவிகள் மற்றும் வசதிகளுடன் சக்தி பல் மருத்துவ மனையைத் தொடங்கி, மிகச் சிறந்த பல் மருத்துவச் சேவையாற்றி வருகிறார். மருமகள் திருமதி உமாதேவி M.Sc., பேத்தி நித்திலம், பேரன் சித்ரம்வேல். செல்வி நித்திலம் SRMRI - ல் பல் மருத்துவம் படிக்கிறார்.

தந்தை தூரன் அவர்களுடைய இசைப்பாடல்களிலும், கவிதை நயத்தோடும், இசை நயத்தோடும், தெய்வாம்சம் பொருந்தியதாகவும் விளங்கும் கீர்த்தனைகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ள திருமதி சாரதாமணி அவர்கள், கொங்கு நாட்டுப் பாடல்கள் பலவற்றை வானொலியில் பாடியுள்ளார். தமிழிசையைத் தரணியெங்கும் பரப்பிடும் உன்னத நோக்கத்துடன் அவர்கள் குடும்பத்தினரால் தொடங்கப்பட்டுள்ள பத்மபூஷண் பெரியசாமித்தூரன் தமிழிசை அறக்கட்டளையின் அறங்காவலர்களுள் ஒருவராக இவர் உள்ளார். அறக்கட்டளை சார்பில் இசைப் போட்டிகள் நடத்தி, வெற்றி பெறும் குழந்தைகளுக்கு மட்டுமல்லாமல், அக்குழந்தைகளின் இசை குருமார்களுக்கும் பரிசுகள் வழங்கப்பட்டு வருகின்றன. திருமதி சாரதாமணி, தந்தையாரின் பாடல்களைக் குழந்தைகளுக்கும், மாணவ மணிகளுக்கும் இலவசமாகக் கற்றுத் தருகிறார்.

கொங்குச் சமுதாயப் பணி, இசைப்பணி, அறக்கட்டளைப் பணி முதலானவற்றில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு, தந்தையார் தூரன் அவர்களின் புகழைப் போற்றும் அரும் பணியையும் மேற்கொண்டு, சென்னையில் வசித்துவரும் கொங்கு மகளிருள் ஓர் ஒளிவிளக்காய்த் திகழ்ந்துவரும், முன்னாள் செயற்குழு உறுப்பினர் திருமதி சாரதாமணி சின்னசாமி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்





**திரு. வி.பி.சுப்பராயன்** **டாக்டர். டி.கே.சுப்பிரமணியம்**

## கொடுமுடி, சிவகிரி ஸ்ரீசங்கர வித்யாசாலா போர்ட்

ஈரோடு மாவட்டம், கொடுமுடி அக்கிரஹாரத்தில் 1910 ஆம் ஆண்டு திரு.கே.எஸ். நாராயணனய்யர், திரு. மூலனூர் முத்துசாமி கவுண்டர், ஆண்டிகாடு முத்துசாமி கவுண்டர் ஆகியோரின் உதவி மற்றும் முயற்சியால் கொடுமுடி ஸ்ரீ சங்கர வித்யாசாலா போர்ட் என்ற பெயரில் ஒரு பள்ளி தொடங்கப்பட்டது. கிராமப்புற மாணவ, மாணவிகளுக்குக் கல்வியறிவூட்டும் நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பள்ளி, 1916 ஆம் ஆண்டு நடுநிலைப் பள்ளியாகவும், 1919 ஆம் ஆண்டு S.S.V உயர்நிலைப் பள்ளியாகவும் தரம் உயர்த்தப் பட்டது. நிறைய நிலங்களைத் தானமாகக் கொடுத்த பெரியண்ண செட்டியார், 1932 ஆம் ஆண்டு வரை, போர்டின் தலைவராகப் பணிபுரிந்தார்.

1966 ஆம் ஆண்டு பெண்கள் உயர்நிலைப் பள்ளி, S.S.V போர்டால் தனியாக ஆரம்பிக்கப்பட்டு 1000 மாணவிகளுடன் நடத்தப்பட்டு வருகிறது. 1979 ஆம் ஆண்டு முதல் S.S.V நர்சரிப் பள்ளி கொடுமுடியிலும், 1986 ஆம் ஆண்டு S.S.V மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி சிவகிரியிலும், 1990 ஆம் ஆண்டு S.S.V நர்சரிப் பள்ளி கொளா நல்லியிலும் துவக்கப்பட்டன. தற்சமயம் சுமார் 6000 கிராமப்புற மாணவ, மாணவியர் இப்பள்ளிகளில் பயின்று வருகின்றனர்.

கிராமப்புற மாணவ, மாணவிகளின் கல்வி வளர்ச்சியை மட்டுமே நோக்கமாகக் கொண்டு, எந்த வித லாப நோக்கமும் இல்லாமல் கல்வி நிறுவனங்களை மிகச்சிறப்புடன் நடத்திவரும் S.S.V Board என்னும் சொசைட்டியில் 1999 ஆம் ஆண்டு முதல் திரு. V.P சுப்பராயன் அவர்கள் தலைவராகவும், Dr.T.K. சுப்பிரமணியம் அவர்கள் செயலாளராகவும் சிறப்புடன் பணியாற்றி வருகிறார்கள்.

ஈரோடு மாவட்டம் வடக்குப் புதுப்பாளையம் ஊரைச் சேர்ந்த திரு. C. பெரியசாமி கவுண்டர் அவர்களின் மகனாக, 1929 ஆம் ஆண்டு பிறந்தவர் திரு. V.P சுப்பராயன். கொடுமுடி S.S.V உயர்நிலைப் பள்ளியில் S.S.L.C. தேர்ச்சி பெற்றார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும், சென்னை பிரசிடென்சி கல்லூரியிலும் பட்டப்படிப்பை முடித்தார். சென்னை சட்டக் கல்லூரியில் B.L., முடித்தார். 1955 முதல் ஈரோடு கோர்ட்டுகளில் 1964

வரை சிவில், கிரிமினல் வழக்குகளிலும், பிறகு சிவில் வழக்குகளில் மட்டும் வழக்கறிஞராகப் பணியாற்றுகிறார்.

இவரது மூத்த மகன் S. அருணகிரி, B.E., சென்னையில் Baron Powers மற்றும் Baron Enterprises என்ற தொழில் நிறுவனங்களை நிறுவி, தற்சமயம் அவர் மனைவி அமுதா அருணும், மகன் சித்தார்த் B.E.–யும் இந்நிறுவனங்களை நடத்தி வருகின்றனர். மேலும் சென்னை காஸ்மாபாலிட்டன் கிளப்பில் 2 ஆண்டுகள் செயலாளராகவும், மூன்று ஆண்டுகள் தலைவராகவும் அருணகிரி பணியாற்றினார். இவரின் இளைய மகன் S. அருள், பெருந்துறை கொங்கு பொறியியல் கல்லூரியில் ரிஜிஸ்ட்ரார் ஆகப் பணியாற்றி வருகிறார்.

கரூர் மாவட்டம், திருக்காடுதுறை கிராமத்தில் 1934 ஆம் ஆண்டு திரு. குப்பண கவுண்டர்– திருமதி பெருமாயி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர், Dr.டி.கே. சுப்பிரமணியம். இண்ட்டர் மீடியெட் படிப்பைத் திருச்சி St.Joseph's கல்லூரியிலும், M.B.B.S. பட்டப்படிப்பை 1961 ஆம் ஆண்டு சென்னை M.M.C யிலும் படித்து முடித்தார்.

1962 ஆம் ஆண்டு முதல் 1966 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு அரசு மருத்துவத் துறையில் பணியாற்றினார். பின்னர் அரசுப் பணியைத் துறந்து, கொடுமுடியில் திருமுருகன் நர்சிங் ஹோம் என்ற மருத்துவ மனையைத் துவக்கி, மருத்துவப் பணியைச் சிறப்பாகச் செய்து வருகிறார். 1975 ஆம் ஆண்டு S.S.V Board – ல் கல்விச் சேவையைச் செய்திட, தன்னை உறுப்பினராக இணைத்துக் கொண்டார்.

இக்கழகத்தில் 10 ஆண்டுகள் இணைச் செயலாளராகவும், 10 ஆண்டுகள் (பொறுப்பு) செயலாளராகவும், கடந்த 15 ஆண்டுகளாகச் செயலாளராகவும் மிகவும் சிறப்புடன் பணியாற்றி வருகிறார். கொடுமுடி அரிமா சங்கத்தின் பட்டயத் தலைவராகவும், நொய்யல் செல்லாண்டி அம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக கமிட்டியின் தலைவராகவும் பொறுப்பேற்று அறப்பணிகளில் ஈடுபட்டார்.

இவரது மனைவி திருமதி ஜெயலட்சுமி. இத்தம்பதியருக்கு Dr.சிவக்குமார் என்ற மகனும், திருமதி கல்பனாதேவி, திருமதி சுஜரிதா என்ற மகள்களும் உள்ளனர்.

மிகச் சிறந்த முறையில், சிறிதும் இலாபநோக்கமின்றி, கிராமப்புற மாணவ, மாணவிகளுக்கு மிகச்சிறந்த கல்விச் சேவையை அளித்து வரும் S.S.V Board கல்விக் கழகத்தின் தலைவர் திரு. வி.பி. சுப்பராயன், செயலாளர் Dr. டி.கே. சுப்பிரமணியம் ஆகிய இருவருக்கும் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

S.S.V Board நிர்வாகிகள் அனைவருக்கும் பாராட்டுத் தெரிவிப்பதோடு, இத்தொண்டு தொடர சங்கம் வாழ்த்துகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. எம்.வெள்ளிங்கிரி

கோவை மாவட்டம், பொள்ளாச்சியைச் சேர்ந்த திரு. முத்துசாமி கவுண்டர் – திருமதி காளிமுத்துக்கமலம் தம்பதியரின் மகனாக 1937 ஆம் ஆண்டு பிறந்தவர், திரு. எம். வெள்ளிங்கிரி. பள்ளிக் கல்வியைப் பொள்ளாச்சியிலும், கல்லூரிப் படிப்பை கோவை மற்றும் சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத்திலும் முடித்தார். தமிழ்நாடு காவல்துறையில் 1962 ஆம் ஆண்டு உதவி ஆய்வாளராகப் பணியில் சேர்ந்த இவர், 33 ஆண்டுகள் பல்வேறு இடங்களில் மிகச் சிறப்பாகப் பணியாற்றி, 1995 ஆம் ஆண்டு DSP பொறுப்பில் இருந்தபோது, பணியில் இருந்து ஓய்வு பெற்றார்.

சேலத்தில் இவர் DSP ஆகப் பணியாற்றியபோது, ஏற்காடு மலையடிவாரச் சாலை நடைப்பயிற்சியாளர் சங்கம் (Walkers Club) என்ற 45 பேர் கொண்ட அமைப்பை ஏற்படுத்தினார். சேலம் நகரில் உள்ள கல்லூரி, பள்ளி மாணவர்களுக்கு 18 KM தூரம் கொண்ட ஏற்காடு மலையேறும் நிகழ்ச்சிக்கு (Trekking Programme) ஏற்பாடு செய்தார், இந்நிகழ்ச்சியில் 1988 ஆம் ஆண்டு முதல் 1995 ஆம் ஆண்டு வரை ஒவ்வோர் ஆண்டும் சுமார் 1500 பேர் பங்கேற்றனர். Walkers Club சார்பாக அரசு காதுகேளாதோர் பள்ளி, அரசு அனாதை இல்லம், பார்வையற்றோர் பள்ளி முதலானவற்றிற்குத் தேவையான உதவிகளைச் செய்ததில் திரு. வெள்ளிங்கிரி முக்கியப் பங்காற்றினார். காது கேளாதோர் பள்ளி மாணவர்களுக்கு இசைக் கருவிகள் வாங்கிக் கொடுத்து, தக்க பயிற்சியும் அளித்து, ஓர் இசைக்குழுவை ஏற்படுத்தி, சேலம் நகரில் நடைபெற்ற பல்வேறு விழாக்களில், இக்குழு நிகழ்ச்சிகளை நடத்திடச் செய்ததோடு, அதன் மூலம் கிடைக்கும் தொகையை அவர்கள் நலனுக்குப் பயன்படுத்திடச் செய்தார்.

பணி ஓய்விற்குப் பின்னர், TNPL – ல் பாதுகாப்பு அலுவலராய்ச் சேர்ந்த திரு. வெள்ளிங்கிரி TNPL Employees Charitable Service என்ற அமைப்பை ஏற்படுத்தி அருகிலுள்ள பள்ளிகளில் படித்த ஏழை மாணவர்களுக்குப் பலவகையிலும் உதவிட வழிவகுத்தார். 2001 ஆம் ஆண்டு கண்மணி அறக்கட்டளையைத் தொடங்கி, இதன் மூலம் ‘அன்பாலயா’ என்ற காது கேளாதோருக்கான ஒரு பள்ளியைக் கரூர் நகரில் துவக்கிட

ஏற்பாடு செய்தார். இப்பள்ளியில் சுமார் 40 காதுகேளாத குழந்தைகளும், 20 கண் தெரியாத குழந்தைகளும் தற்போது படித்து வருகின்றனர். ரூபாய் 25 லட்சம் செலவு செய்து கட்டப்பட்ட கண்மணி அறக்கட்டளையின் சொந்தக் கட்டடத்தில் அனைத்து மாணவர்களுக்கும் கல்வி, உணவு வசதி, மருத்துவ வசதி முதலானவை இலவசமாக வழங்கப்படுகின்றன.

இங்குப் படித்து முடித்த மாணவர்களுக்கு ஏற்றுமதி நிறுவனங்களில் வேலை கிடைக்க, அறக்கட்டளை தகுந்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது. தன் சொந்த பணமான ரூ பத்து லட்சத்தைக் கொண்டு கரூரில் ‘கஸ்தூரிபாய் காந்தி அறக்கட்டளை’யை நிறுவி, ஏழைக் குழந்தைகளின் கல்வி மற்றும் மருத்துவத் தேவைகளுக்கு உதவி வருகிறார்.

கரூர் மாவட்டத்தில் காது கேளாத மற்றும் கண் பார்வையற்ற குழந்தைகளுக்காக ‘Anbalayam Special School for Hearing Handicapped’ என்ற பள்ளி தவிர, வேறு பள்ளியே இல்லை. இங்கு 2002 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வோராண்டும் சுமார் 40 மாணவ, மாணவியர் கல்வி பயின்று பயனடைகின்றனர். 2005 ஆம் ஆண்டு, மாற்றுத் திறனாளி குழந்தைகளின் நல வாழ்விற்குத் தொண்டு செய்ததற்காக, மத்திய அரசின் National Award இப்பள்ளிக்குக் கிடைத்தது. 2006 ஆம் ஆண்டு, இப்பள்ளியில் பயின்ற, பார்வையற்ற மாணவி ஒருவருக்கு யோகா பயிற்சியிலும், படிப்பிலும் சிறந்து விளங்கியமைக்குத் தேசிய விருது கிடைத்தது.

மாற்றுத் திறனாளிகள் தங்குவதற்கு விடுதி, ஆரம்பக் கல்வி பயில தனி பள்ளி ஆகிய வசதிகளோடு, அவர்களுக்கு ஏற்றுமதி நிறுவனங்கள் போன்றவைகளில் தகுந்த வேலை கிடைக்கவும் கண்மணி அறக்கட்டளை வழிவகை செய்கிறது, இங்குத் தங்கிப் படித்த மாணவர்களில் பலர் தற்போது நல்ல வேலைகளில் உள்ளனர். இரண்டு மாணவர்கள் தற்போது Ph.D பட்டம் பெற ஆய்வு செய்து வருகின்றனர்.

திரு.வெள்ளிங்கிரி அவர்களுக்கு திருமதி ராஜேஸ்வரி என்ற மனைவியும், திரு.முத்துக்குமார்,B.E., என்ற மகனும் உள்ளனர். மருமகள் திருமதி ஹேமலதா, M.Com., M.phil. பட்டங்கள் பெற்றவர்.

ஏழை மாணவர்களுக்குக் கல்வி வசதி, மருத்துவ வசதி, மாற்றுத் திறனாளிகள் கல்வி கற்க ‘கண்மணி அறக்கட்டளை’ மூலம் தங்கும் விடுதி, உணவு மற்றும் மருத்துவ வசதிகள், வேலை வாய்ப்புக்கு உதவி முதலானவற்றை ஏற்படுத்திக் கொடுத்ததோடு, ‘கஸ்தூரிபாய் காந்தி’ அறக்கட்டளையை நிறுவி ஏழைக் குழந்தைகளுக்குச் சேவைகளைச் செய்து, சிறந்த முறையில் பொதுப்பணி ஆற்றி வரும் கண்மணி அறக்கட்டளைத் தலைவர் திரு. வெள்ளிங்கிரி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் எல்.பி.தங்கவேலு

ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் நகரில் 1951 ஆம் ஆண்டு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த திரு. பெரிச்சி கவுண்டர் – திருமதி வள்ளியம்மாள் தம்பதியரின் மகனாகப் பிறந்தவர், மருத்துவத் துறையில் சாதனைகள் படைத்துள்ள டாக்டர் எல்.பி. தங்கவேலு அவர்கள்.

சத்தியமங்கலம் அரசுப் பள்ளியில் SSLC , கோவை P.S.G கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் PUC , கோவை மருத்துவக் கல்லூரியில் 1976 ஆம் ஆண்டு M.B.B.S பட்டம், 1984 ஆம் ஆண்டு M S பட்டம், ஜெர்மனி கேய்ல் பல்கலைக் கழகத்தில் இடுப்பு அறுவை சிகிச்சை(Pelvic Surgery) மற்றும் லேப்ராஸ்கோபிக் அறுவை சிகிச்சையில்(Laparoscopic Surgery) பட்டயம் –இவ்வாறு இவருடைய படிப்பு மற்றும் உயர்கல்வி வெற்றிகரமாகத் தொடர்ந்தது.

இந்திய அளவிலும், அமெரிக்கா, கனடா, யு.கே, ஜெர்மனி, பிரான்ஸ், சுவிர்ஸலன்ட், நெதர்லேன்ட்ஸ், ஜப்பான், ஹாங்காங், சிங்கப்பூர், இலங்கை, சைனா, ஆஸ்திரேலியா போன்ற வளர்ந்த நாடுகளிலும் நடைபெற்ற மருத்துவ மாநாடுகளில் கலந்து கொண்டு எண்ணற்ற ஆய்வுக் கட்டுரைகளைப் படைத்துள்ளார்.

தன் தந்தை பெயரில், பி.பெரிச்சி கவுண்டர் நினைவு அறக்கட்டளையைத் தொடங்கி, அதன்மூலம் சமுதாயத்திற்குச் சேவைகள் பல புரிந்து வருகிறார். நலிந்த மக்களுக்கு மருத்துவ சிகிச்சை மற்றும் தரமான கல்வி அளிப்பதை முக்கிய நோக்கங்களாகக் கொண்டுள்ள இந்த அறக்கட்டளை சார்பாக கோவையில் அஸ்வின் PPG புற்றுநோய் மருத்துவ மனையைத் தொடங்கி சிறப்பாக நடத்தி வருகிறார். நவீன வசதிகள் மற்றும் கருவிகள் கொண்டுள்ள இந்த மருத்துவ மனையில் புற்றுநோய் நோயாளிகளுக்கு மருத்துவச் சிகிச்சை, கதிரியக்க சிகிச்சை மற்றும் அறுவை சிகிச்சை சிறந்த முறையில் செய்யப்படுகிறது, நடுத்தர மக்களுக்கு குறைந்த செலவிலும், ஏழைகளுக்கு இலவசமாகவும் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

கோவை மாவட்டத்தில் பல ஊர்கள், நகரங்கள், பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகின்ற தாளவாடி, சத்தியமங்கலம் போன்ற ஊர்கள், மகளிர் கல்லூரிகள் முதலான இடங்களில் இலவசப் புற்றுநோய் விழுப்புணர்ச்சி மருத்துவ முகாம்கள் பலவற்றை நடத்தியுள்ளார்.

1998 ஆம் ஆண்டு பல்வேறு மருத்துவப் படிப்புகளுக்காக Institute of Health Sciences நிறுவனத்தையும், 2005 ஆம் ஆண்டு ஆசிரியர் பயிற்சி நிறுவனம், ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி ஆகியவற்றையும், 2008 ஆம் ஆண்டு பொறியியல் கல்லூரியையும், 2009 ஆம் ஆண்டு ( MBA) மேலாண்மைக் கல்வி நிறுவனத்தையும் தொடங்கிக் கல்விப் பணியாற்றி வருகிறார், 3500 மாணவர்கள் இந்நிறுவனங்களில் தரமான கல்வியை, குறைந்த செலவில் பெற்றுப் பயனடைந்து வருகின்றனர்.

Indian Medical Association (இந்திய மருத்துவக் கழகத்தின்) தமிழ்நாடு பிரிவின் தலைவராக 2012 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட இவர், 2013 ஆம் ஆண்டிலும் இப்பொறுப்பில் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். இவருடைய சேவைகளைப் பாராட்டி, 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு Dr.MGR மருத்துவப் பல்கலைக் கழகம் இவருக்கு ‘வாழ்நாள் சாதனையாளர்’ விருது வழங்கி கௌரவித்தது. மேலும், இப்பல்கலைக் கழகம், இவருக்கு கௌரவ டாக்டர் பட்டம் (D.Sc) வழங்கிச் சிறப்பித்தது. இந்திய அறுவை சிகிச்சை சங்கத்தின் செயலாளராகவும், (IMA) இந்திய மருத்துவச் சங்கம்(கோவை கிளை) தலைவராக மூன்று முறையும், மேற்கு மண்டல IMA – ன் துணைத் தலைவராகவும், அருள்மிகு கோணியம்மன் திருக்கோயில் அறக்கட்டளைத் தலைவராகவும் பொறப்பேற்று மிகச் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்.

தற்போது அஸ்வின் மருத்துவமனையில் நிர்வாக இயக்குநராகவும், பி.பெரிச்சி கவுண்டர் நினைவு அறக்கட்டளையின் நிர்வாக அறங்காவலராகவும், PPG கல்வி நிறுவனங்களின் தலைவராகவும், கோவை புற்றுநோய் நிறுவனம் மற்றும் அஸ்வின் PPG புற்றுநோய் மருத்துவமனை தலைவராகவும், இந்திய கேஸ்ட்ரோ என்ட்ரோலஜி அறுவை சிகிச்சை மருத்துவர்கள் சங்கத்தின் துணைத் தலைவராகவும், தமிழ்நாடு IMA தலைவராகவும், தமிழ்நாடு Dr.MGR பல்கலைக் கழகத்தின் செனட் உறுப்பினராகவும் மற்றும் பல்வேறு மருத்துவக் குழுக்களிலும், சங்கங்களிலும் உறுப்பினராகவும் உள்ளார்.

மருத்துவத்தில் ஆழ்ந்த திறமை, ஓய்வறியா உழைப்பு, மனித நேயம், செயல் ஆற்றல் முதலான அரும் பண்புகளைக் கொண்டுள்ள இவருடைய, மனைவி திருமதி சாந்தி இவருடைய சாதனைகளுக்கு ஊக்க சக்தியாகத் திகழ்கின்றார். இத்தம்பதியருக்கு Dr.அஸ்வின், Dr.சுவேதா அசோக்குமார், திரு.அக்ஷய் ஆகிய மூன்று செல்வங்கள் உள்ளனர்.

கொங்குச் சமுதாயமும், தமிழ்நாடும் பெருமைப்படும் வண்ணம், உன்னதமான மருத்துவப் பணியில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டு சாதனைகள் பல புரிந்துள்ள டாக்டர் தங்கவேலு அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



**திரு. ஆர். பெரியசாமி** (PSK)

நாமக்கல் மாவட்டம் காளப்ப நாயக்கன்பட்டியைச் சேர்ந்த திரு. மு. இராமசாமி கவுண்டர் – திருமதி பெருமாயி அம்மாள் தம்பதியரின் மூத்த மகனாக 1952 ஆம் ஆண்டு பிறந்தவர், திரு. ஆர். பெரியசாமி அவர்கள்.

காளப்பநாயக்கன்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளியில் 1969 ஆம் ஆண்டு SSLC முடித்த பின்னர், நாமக்கல் அரசு கலைக் கல்லூரியில் 1970 ஆம் ஆண்டு புகுமுக வகுப்பை முடித்தார். அதன்பிறகு, சேலம் தியாகராயர் பாலிடெக்னிக் கல்லூரியில் DCE பட்டயப் படிப்பில் சேர்ந்து, 1974 ஆம் ஆண்டு முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். SSLC படித்த போது, பள்ளி மாணவர்த் தலைவராகவும், PUC படித்தபோது ஒன்றியச் செயலாளராகவும், பாலிடெக்னிக்கில் படித்தபொழுது, கல்லூரி விடுதியின் தலைவராகவும் பொறுப்பேற்றுச் சிறப்பாகப் பணியாற்றினார்.

தொழில் கல்வி முடித்த பிறகு, ஒரு தனியார் கட்டுமான நிறுவனத்தில் பணியில் சேர்ந்து, வேலையில் நிபுணத்துவம் பெற்றதோடு, நல்ல அனுபவமும் பெற்றார். 1974 ஆம் ஆண்டு PSK Engineering Construction & Co என்ற நிறுவனத்தை உருவாக்கி, அதன் தலைமைப் பொறுப்பேற்று பலவிதமான கட்டுமானப் பணிகளைச் சிறந்த முறையில் முடித்துள்ளார்.

சிதம்பரம், மணப்பாறை, அறந்தாங்கி ஆகிய நகர்களில் அரசு கலைக் கல்லூரி கட்டடங்கள்; நாமக்கல், விழுப்புரம், திருவண்ணாமலை, திருச்சி ஆகிய நகரங்களில் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள்; திருச்சி, பாண்டிச்சேரி, விழுப்புரம், தருமபுரி, சென்னை(MMC & KMC), திருவண்ணாமலை ஆகிய நகரங்களில் அரசு மருத்துவக் கல்லூரி கட்டடங்கள்; ஆத்தூர், விழுப்புரம், தாம்பரம் ஆகிய நகரங்களில் பேருந்து நிலையக் கட்டடங்கள்; சட்டமன்ற 60 ஆம் ஆண்டு நினைவு வைர விழா வளைவு முதலானவை இவருடைய கட்டுமானப்பணிச் சாதனைகளுக்குச் சான்றுகளாக விளங்குகின்றன.

தற்சமயம் தமிழ்நாடு தலைமைச் செயலகக் கட்டடம் புதுப்பித்தல் பணி, ஓரத்தநாடு கால்நடை மருத்துவக்கல்லூரி, திருச்சி Super Speciality Hospital , திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி முதலான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன்மூலம் 5000 குடும்பங்கள் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளன.


கொல்லிமலை வாழ் மக்களின் போக்குவரத்து வசதிக்காகவும், காளப்பநாயக்கன் பட்டி மக்களின் வசதிக்காகவும், பேருந்துகளை இயக்கி, பிறந்த மற்றும் வளர்ந்த மண்ணின் மக்களுக்குப் பேருதவி செய்துள்ளார். 2000 ஆம் ஆண்டு பொன்னேரி கிராமத்தில் இயங்கி வந்த சரண்யா ஸ்பின்னிங் மில்ஸ் பிரைவேட் லிமிடெட் எனும் நூற்பாலைக்குத் தலைமைப் பொறுப்பேற்று, அந்த நூற்பாலையை பெரிய அளவில் வளர்ச்சியடையச் செய்துள்ளார். ஆரம்பத்தில் 3500 Spindles - உடன் இயங்கிவந்த இந்த நூற்பாலை தற்போது 25,000 Spindles- உடன் இயங்கி வருகிறது. இதனால் சுமார் 1500 குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது.

2010 ஆம் ஆண்டு ஏழூர்பட்டி எனும் இடத்தில் இயங்கி வந்த கொங்குநாடு கல்வி நிறுவனங்களின் தலைமைப் பொறுப்பேற்று, சிறந்த கல்வியாளராகவும் திகழ்கிறார். ஒவ்வொரு வருடமும் +2 தேர்வில் 95 சதவீத மதிப்பெண்களுக்கு மேல் பெறுகின்ற 50 மாணவ, மாணவியருக்கு கல்லூரி கட்டணம், விடுதிக் கட்டணம் உட்பட அனைத்தும் இலவசமாக அளித்து வருகிறார்.

நமது பாரம்பரியத் தொழிலான விவசாயத்திலும் ஈடுபட்டு, 130 ஏக்கர் பரப்பளவில் சிறப்பான முறையில் விவசாயம் செய்து வருகிறார். 150 கறவை மாடுகளுக்கு மேல் உள்ள பால் பண்ணையையும் நடத்தி வருகிறார். இதனால் பலருக்கும் வேலைவாய்ப்பு, உணவு, பால் ஆகியன எளிதில் கிடைக்கச் செய்கிறார். நாடி வந்தோர்க்குப் பலவகையிலும் உதவி புரிந்து வருகிறார்.

எளிமை, இன்சொல், கடின உழைப்பு, தொழில் திறமை, தலைமைப் பண்புகள், ஈகைத் தன்மை போன்ற அருங்குணங்கள் கொண்ட இவருடைய, மனைவி திருமதி லட்சுமி இவருடைய சாதனைகளுக்குப் பெரிதும் பக்க பலமாக உள்ளார். இவருக்கு அருண்குமார், அசோக்குமார் என்ற இரண்டு மகன்கள் உள்ளனர். திரு. அருண்குமார் மனைவி திருமதி அனிதா துணையுடனும், திரு. அசோக்குமார் மனைவி திருமதி ரேவதி துணையுடனும் தொழில் துறையில் ஈடுபட்டுள்ளனர். அரிய சாதனைகளைப் புரிந்து, கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துள்ள திரு. PSK பெரியசாமி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர் ’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் கே. குமாரசாமி

கோவை மாவட்டம், தொண்டாமுத்தூர் வட்டம், போளுவாம்பட்டி காரமரத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.குப்பண்ண கவுண்டர் – திருமதி பெரியம்மாள் தம்பதியருக்கு 1956 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தார், Dr.கே. குமாரசாமி அவர்கள்.

1977 ஆம் ஆண்டு கோவை அரசு கலைக் கல்லூரியில் B.A(Geography)பட்டமும், 1979 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் M.Sc,(Geography) பட்டமும், 1982 ஆம் ஆண்டு மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்தில் B.Ed. பட்டமும், 1985 ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக் கழகத்தில் (Ph.D) டாக்டர் பட்டமும், 1993 ஆம் ஆண்டு ஹங்கேரி நாட்டின் VITUKI நிறுவனத்தில் பன்னாட்டு முதுகலைப் பட்டயமும் பெற்றார். B.A. மற்றும் M.Sc தேர்வுகளில் பல்கலைக் கழகத்திலேயே முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்றுச் சாதனை படைத்தார்.

1986 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம் ஆண்டு வரை சென்னைப் பல்கலைக் கழகத்தின் புவியியல் துறையில் ஆய்வு உதவியாளராய்ப் பணியாற்றினார். 1988 ஆம் ஆண்டு முதல் தற்போதுவரை திருச்சி பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில், 25 ஆண்டுகளாகத் தொடர்ந்து சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். விரிவுரையாளர், ரீடர், இயக்குநர், ஒருங்கிணைப்பாளர், பேராசிரியர், துறைத் தலைவர் எனப் படிப்படியாக உயர்ந்து, சிறந்ததொரு புவியியல் பேராசிரியராகத் திகழ்கிறார்

UNESCO மற்றும் Germen IHP/OHP திட்டங்களில் இவர் பங்கு பெற்று சிறப்பாகச் செயலாற்றி வருகிறார். ஆய்வு மற்றும் ஆசிரியர் பணிகள் தொடர்புள்ள செயல்பாடுகள் முதலானவற்றிற்காக டாக்டர் குமாரசாமி அவர்கள் நெதர்லாண்ட்ஸ், தாய்லாந்து, ஸ்வீடன், சிங்கப்பூர், பிரான்ஸ், ஜெர்மனி, இலங்கை, கனடா முதலான நாடுகளுக்குச் சென்று பணியாற்றிய சிறப்புக்குரியவர் ஆவார். தேசிய மற்றும் பன்னாட்டு இதழ்களில் 90 க்கும்

மேற்பட்ட இவருடைய புவியியல் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகள் வெளிவந்ததோடு, நல்ல வரவேற்பையும் பெற்றன. Remote Sensing, GIS மற்றும் சுற்றுச்சூழல் ஆய்வு ஆகியவை பற்றி 10 விஞ்ஞான நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் தேசிய அளவில் புலியியல் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து சிறப்பாக நடத்தியுள்ளார். பன்னாட்டு அளவிலும், தேசிய அளவிலும் உள்ள பல்வேறு சங்கங்களிலும், குழுக்களிலும், தொழில் மற்றும் கல்வி அமைப்புகளிலும் ஆயுள் உறுப்பினராகவோ அல்லது மதிப்பு வாய்ந்த ஏதாவதொரு பொறுப்பை ஏற்றுள்ளவராகவோ இருந்து வருகின்ற பெருமைக்குரியவர், இவர்.

புவியியல் துறையில் பல்லாண்டுகளாகத் தொடர்ந்து பயனுள்ள பல ஆய்வுகள் நடத்திச் சாதனை புரிந்துள்ள இவருக்கு சென்னையிலுள்ள இந்திய புவியியல் சங்கம் (Indian Geographical Society) என்ற அமைப்பு 'பேராசிரியர் பி. எம்.திருஞானம் விருது' என்ற உயரிய விருதினை வழங்கி கௌரவித்தது. Water Resources Management, Remote Sensing, Geographical Information System ஆகிய துறைகளில் சிறப்பு நிபுணத்துவம் பெற்றுள்ள இவர், M.Tech, Geo informatics Program பாடத்தைப் பயிற்றுவிக்கிறார். சென்னையிலிருந்து வெளிவரும் ' Indian Geograpical Journal' என்ற இதழுக்கு அண்மையில் ஆசிரியராகப் பொறுப்பேற்று, சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார். 14 Ph.D ஆய்வு மாணவர்களுக்கும், 50 M.Phil/M,Tech மாணவர்களுக்கும் நெறியாளராய் இருந்து, அவர்களுக்குச் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்து பட்டங்கள் பெற்றிட உதவியுள்ளார்.

ஆற்றலும், அயரா உழைப்பும், புவியியலில் ஆழ்ந்த அறிவும், உலகார்ந்த அனுபவமும் மிக்க இவருடைய, மனைவி திருமதி மனோரஞ்சிதம் இவருடைய புவியியல் துறை ஆய்வு களுக்கும் சாதனைகளுக்கும், வெற்றிகளுக்கும் பின் நிற்பவர். இத்தம்பதியருக்கு இரண்டு மகன்கள். சூரியகுமார் B.E. படிப்பும், சந்திரகுமார் +2 படிப்பும் பயின்று வருகின்றனர்.

உன்னதமான ஆசிரியர் பணி மேற்கொண்டு புவியியல் துறையில் நாட்டிலேயே சிறந்த புவியியல் பேராசிரியர்களுள் ஒருவராய்த் திகழ்வதோடு, எண்ணற்ற புவியியல் வல்லுநர்களை உருவாக்கி, கொங்குச் சமுதாயம் பெருமை கொள்ளும் அளவிற்கு சிறந்த முறையில் ஆசிரியப் பணியாற்றிச் சாதனைகள் புரிந்துள்ள டாக்டர் குமாரசாமி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் எஸ். சந்திரலேகா வேலுசுவாமி

கோவை நகரில் முதன்முதலில் ECG வாங்கி பல உயிர்களைக் காப்பாற்றிய தலைசிறந்த மருத்துவரும், சென்னை MMC –ல் MBBS படிப்பில் ஜான்சன் தங்க மெடல் வாங்கியவருமான Dr. P.R. சுப்பையன் – கல்வியாளர், சமூக சேவகி, விளையாட்டு வீராங்கனை போன்ற பன்முகங்கள் கொண்ட பேராசிரியை திருமதி சௌந்தரி ஆகியோரின் மகளாகப் பிறந்தவர் பழனி ஐஸ்வர்யா மகளிர் மருத்துவமனை, கருத்தரிப்பு மைய டாக்டர் S. சந்திரலேகா அவர்கள்.

1978 ஆம் ஆண்டு SSLC தேர்வில் மாநிலத்தில் முதவிடம், அவினாசிலிங்கம் ஹோம் சயின்ஸ் கல்லூரியில் 1979 ஆம் ஆண்டு PUC முடித்த போது, பல்பலைக்கழகத்தில் முதல் இடம், பின்னர் கோவை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து 1986 ஆம் ஆண்டு MBBS பட்டம் பெற்றபோது 13 தங்கப் பதக்கங்கள் மற்றும் ‘Best OutGoing Student’ விருது ஆகியன டாக்டர் சந்திரலேகாவின் வியத்தகு சாதனைகள்.

1987 ஆம் ஆண்டு இவருடைய திருமணம் நடைபெற்றது. திரு. குப்பண்ண கவுண்டர் – திருமதி பழனி அம்மாள் தம்பதியரின் மகனும், புதுடெல்லி AIMS மருத்துவக்கல்லூரியில் MBBS, M.D. பட்டங்கள் பெற்றதோடு, தங்க மெடல் வாங்கியவருமான டாக்டர் வேலுசுவாமி இவருடைய கணவர். இத்தம்பதியருக்கு Dr.V.அருண் முத்துவேல், Dr.V.அரவிந்த் சந்தர் என இரண்டு மகன்கள் உள்ளனர். இருவரும் மருத்துவத்துறையில் சிறந்து விளங்குகின்றனர். மனைவியின் சாதனைகளுக்கு உறுதுணையாக இருக்கும் டாக்டர் வேலுசுவாமி, பழனி பாரதிய வித்யா பவன் மேல்நிலைப் பள்ளி நிர்வாக அறங்காவலராகவும், V.C. மருத்துவ மற்றும் கல்வி அறக்கட்டளையின் அறங்காவலராகவும், K.V. இதய மருத்துவமனை மற்றும் C.T. ஸ்கேன் மைய இயக்குநராகவும் பொறுப்பேற்றுச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்.

1990 ஆம் ஆண்டு கோவை மருத்துவக் கல்லூரியில் டாக்டர் சந்திரலேகா DGO பட்டம் பெற்றார். மீண்டும் தங்கப் பதக்கம் பெற்றுச் சாதனை. பின்னர் பழனி

K.V. மருத்துவமனையில் மகப்பேறு மருத்துவத் துறையைத் தொடங்கினார். 1990 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு அரசு மருத்துவராகப் பணியாற்றினார். அச்சமயத்தில் சிங்கப்பூர் National University Hospital –ல் 'டெஸ்ட் டியூப் பேபி' குறித்த சிறப்புப் பயிற்சி பெற்றார். அதைப் தொடர்ந்து பழனி K.V. மருத்துவமனையில் ஐஸ்வர்யா கருத்தரிப்பு மையத்தைத் துவக்கினார்.

1990 ஆம் ஆண்டு இம்மையத்தில் தனது முதல் சோதனைக் குழாய்க் குழந்தையைப் பிறக்க வைத்து சாதனை புரிந்தார். உலகச் சாதனையாக உறைநிலைசினைமுட்டை விந்தணு முறையில் குழந்தை பிறக்க வைத்தும், பல்லாயிரக்கணக்கான குழந்தையில்லாத் தம்பதிகளுக்கு IVI, IVF, ICSI, Blastosyst முறையில் குழந்தைகள் பிறக்க வைத்தும், இரட்டைக் கர்ப்பப்பை முறையில் குழந்தை பிறக்க வைத்தும் சாதனைகள் புரிந்துள்ளார்.


2000 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் மிக நுட்பமான Ultra Sound & Colour Doppler Scan பயிற்சியை வெற்றிகரமாக முடித்தார். U.K. ல் MRCOG, மிகவும் நுட்பமான Hystero Laproscope பயிற்சி பெற்ற டாக்டர் சந்திரலேகா நவீன மருத்துவ நுட்பங்களைப் பயன்படுத்துவதில் தலைசிறந்து விளங்குகிறார்.

பல மருத்துவ அமைப்புகளில் உறுப்பினராய் உள்ள இவர், பல தேசிய மற்றும் பன்னாட்டுக் கருத்தரங்கங்களிலும், மாநாடுகளிலும் கலந்துகொண்டு சிறந்த ஆய்வுக் கட்டுரைகளைப் படைத்துள்ளார். உலகத்தில் நான்காவதும், இந்தியாவில் முதலானதுமான குழந்தை FEFO முறையில் இவருடைய மையத்தில்தான் பிறந்தது. 2013 மார்ச் மாதம் வரையில் பழனி கருத்தரிப்பு மையத்தில் 5050 குழந்தைகள் பிறந்துள்ளன என்பது யாரையும் மலைக்க வைக்கும் சாதனையாகும்.

27 ஆண்டுகால மருத்துவ அனுபவத்தில் இவரது மதிநுட்ப, நுணுக்கமான, அதிநவீன சிகிச்சையால் குழந்தைப்பேறு பெற்ற ஆயிரக்கணக்கான தம்பதிகள் இவரது பெரும் சாதனைகளுக்குச் சான்றுகளாய் உள்ளனர். பழனியில் உள்ள இவரது கருத்தரித்தல் மையத்தின் கிளைகள் கோவை, மதுரை மற்றும் சென்னையிலும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

குழந்தைச் செல்வம் இல்லாதவர்கள் மழலை பெற்று மகிழ்ந்திட நவீன மருத்துவ முறைகளைப் புகுத்தி, ஓய்வின்றி, சுற்றிச் சுழன்று, அரிய முயற்சிகளை மேற்கொண்டுவருவதோடு, அதில் வெற்றி பெரும் வகையில் பல சாதனைகள் புரிந்து. கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துள்ள டாக்டர் சந்திரலேகா அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டி மகிழ்கிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. மு.இரவி

ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், முருங்கத் தொழுவு ஊராட்சி உப்பிலி பாளையம் கிராமத்தில் 'இளங்கதிர் சமுதாய நல மன்றம்' என்ற சேவை நிறுவனத்தைக் தொடங்கியவரும், முருங்கத்தொழுவு ஊராட்சித் தலைவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டு, கிராம மேம்பாட்டிற்காக அயராது பாடுபட்டவருமான 'இளங்கதிர்' மு.இரவி கிராமப் பணியாற்றிச் சாதனைகள் பல புரிந்துள்ளார்.

1973 ஆம் ஆண்டு திரு. ஆர்.முத்துசாமி - திருமதி மு.ரத்தினம்பாள் தம்பதியரின் மகனாகப் பிறந்தவர் இவர். தனது 22– வது வயதில் 1996 ஆம் ஆண்டு மக்கள் வேட்பாளராக ஊராட்சித் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்ற சிறப்புக்குரியவர். மீண்டும் 2001, 2006, 2011 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஊராட்சித் தலைவர் பதவிக்கான தேர்தல்களிலும் தொடர்ந்து மக்கள் வேட்பாளராய்ப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1996 ஆம் ஆண்டு தலைவர் பதவிக்குப் போட்டியிட்டபோது 612 ஓட்டுகள் வித்தியாசத்திலும், 2001 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 2056 ஓட்டுகள் வித்தியாசத்திலும், 2006 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 1464 ஓட்டுகள் வித்தியாசத்திலும், 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 1461 ஓட்டுகள் வித்தியாசத்திலும் இவர் வெற்றிபெற்றார். எந்த அரசியல் கட்சியிலும் சேராமல், சுயேட்சையாக, மக்கள் வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி வெற்றார் இவர் என்பது குறிப்பிடத் தக்கது.

இளங்கதிர் சமுதாய நல மன்றத்தின் மூலம் பல பொதுசேவைகளைச் செய்துள்ளார். ஊராட்சித் தலைவர் என்ற முறையிலும், இளங்கதிர் சமுதாய நல மன்ற அமைப்பாளர் என்ற முறையிலும் மக்கள் ஆதரவைப் பெற்று, ஊராட்சிப் பகுதியில் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், அரசின் திட்டங்களை மக்களுக்குச் சென்றடைய முன்னோடியாகச் செயல்படுதல், ஏழைகள் கல்வி பெற உதவி, ஊராட்சி சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கபாடி

விளையாட்டு, விவசாயிகளின் உரிமைகள் பெறத் தக்க நடவடிக்கைகள் முதலான சேவைகளைச் செய்து, இவர் அனைத்து ஊர் மக்கள் மற்றும் அரசு அலுவலர்களின் பாராட்டுதல்களைப் பெற்றார்.

இவருக்கு திருமதி தமயந்தி என்ற மனைவியும், சுதர்சன் என்ற மகனும், சுப்ரியா என்ற மகளும் உள்ளனர். செல்வன் சுதர்சன், செல்வி சுப்ரியா இருவரும் பள்ளியில் படித்து வருகின்றனர்.

நாடு முன்னேற, கிராமங்கள் முன்னேற வேண்டும். கிராமத்தில் அடிப்படை வசதிகள் அனைவருக்கும் கிடைத்திட வேண்டும். கிராமங்களை விட்டு நகர்ப்புறங்களுக்கு வேலைதேடிச் செல்வோர் தொகை அதிகரித்துச் கொண்டே போகிறது. விவசாயம் செய்வது மிக உயர்ந்த, மதிப்பாக இருந்த நிலை மாறி, விவசாயம் செய்வதைத் தாழ்ந்து நோக்கும் நிலை தற்போது உருவாகியுள்ளது. கிராமங்களில் தங்கி, விவசாயம் செய்வதை யாரும் விரும்பாத நிலைதான் உள்ளது. விவசாயப் பணிகளுக்கு அதனால் ஆட்களும் கிடைப்பதில்லை. இந்நிலை மாற, கிராமங்களில் அடிப்படை வசதிகள் பெருக வேண்டும். மக்கள் விரும்பித் தங்கும் சூழ்நிலை உருவாக வேண்டும். அவ்வாறு வசதிகள் கிடைத்திட, சேவை மனப்பான்மை கொண்ட, மக்கள் ஆதரவு பெற்றவர் ஊராட்சித் தலைவர் போன்ற பொறுப்புகளுக்கு வரவேண்டும்.

இந்த அடிப்படையில் முருங்கத் தொழுவு ஊராட்சி மன்றத் தலைவராக **1996** ஆம் ஆண்டு முதல் நான்கு முறை தொடர்ந்து தேர்ந்தெடுக்கப்பட்டு, அரசியல் சார்பின்றிச் சேவைகள் பல புரிந்து, கிராம முன்னேற்றப் பணிகள் பல ஆற்றிய இளங்கதிர் மு.இரவி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. க. சந்திரமோகன்

நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த கீழ்சாத்தம்பூர் கிராமத்தில் 1970 ஆம் ஆண்டு திரு. கந்தசாமி – திருமதி பழனியம்மாள் தம்பதியரின் இரண்டாவது மகனாகப் பிறந்தவர் திரு. க. சந்திரமோகன் அவர்கள்.

கீழ் சாத்தம்பூர் கிராமத்தில் பள்ளிப் படிப்பை முடித்ததும், மோகனூர் அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் Automobile Engineering துறையைத் தேர்ந்தெடுத்துப் பயின்றார். பின்னர், டிரான்ஸ்போர்ட் துறை சார்ந்த ஒரு நிறுவனத்தில் சிறிதுகாலம் பணியாற்றி, தொழில் பற்றிய அறிவையும், அனுபவத்தையும் நன்கு பெருக்கிக் கொண்டார்.

1997 ஆம் ஆண்டு நாமக்கல் டிரான்ஸ்போர்ட் கேரியர்ஸ்(NTC) என்ற நிறுவனத்தைத் துவக்கி, அதை 2001 ஆம் ஆண்டு பதிவு செய்தார். மிகச் சிறிய அளவில், குறைந்த மூலதனத்துடன், ஒரே ஒரு வாகனத்துடனும், குறைந்த பணியாளர்களுடனும் துவக்கப்பட்ட இந்நிறுவனம், இவருடைய திறமையாலும், அணுகுமுறையாலும், அயராத உழைப்பாலும் இன்றைய தினம் 33 கிளைகளுடனும், 1500 பணியாளர்களுடனும் இந்தியா மட்டுமின்றி மலேசியா, சிங்கப்பூர் போன்ற மேலை நாடுகளிலும் முத்திரை பதித்து வருகிறது. NTC குடும்பத்தில் NTC Logistics Pvt-ltd ; NTC Shipping Pvt Ltd ; NTC Appliancess Pvt-Ltd, Sreevani Engineers Pvt- Ltd போன்ற நிறுவனங்கள் அங்கம் வகிக்கின்றன.

திரு. சந்திரமோகன் தன் பெற்றோர் பெயரில் 'பழனியம்மாள் கந்தசாமி அறக்கட்டளை'யை நிறுவி, மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகை, ஏழைகளுக்கு இலவச கண் சிகிச்சை முகாம், பள்ளிக் கட்டடங்களைப் புதுப்பித்தல் மற்றும் பள்ளிகளுக்குத் தேவையான பொருட்கள், கணினி முதலானவற்றை இலவசமாக வழங்குதல், கிராமப்புற மேம்பாட்டுப் பணிகளைச் செய்தல், இலவச மருத்துவ முகாம் நடத்துதல், ஓட்டுநர் பயிற்சி, மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு அளித்தல் போன்ற சேவைகளைச் செவ்வனே செய்து வருகிறார்.

போக்குவரத்துத் துறையில் இவர் ஆற்றிய சாதனைகளுக்காக பல விருதுகளைப் பெற்றுள்ளார். Henry Giessenbier Fellowship Award, Rajiv Gandhi Shiromani Award 2006, Indra Gandhi Sadbavana Award 2006, Pride of India Award 2007, International Gold Star Millennium Award 2007, Kamal Patra Award 2009, TOBIP Award 2009, Doctorate of Letters by International Tamil University, USA - 2010, Outstanding Entrepreneurship Award - 2010 & 2011 by Enterprise Asia -Kuala Lumpur, Seva Chakra Puraskar Award - 2011- given by Exclusive Aajtk - Newspaper, Seva East CEO Conclave Award for 2012 given by South East India Cargo & Logistics Awards 2012, Dynamic Entrepreneur of the year award for 2012 given by South East India Cargo & Logistics Awards 2012, Kaalingarayan Award 2012 by Kongu Nadu Arakattalai, All India Motor Congress வழங்கிய மிகவும் உயரிய ‘ TRANSPORT SAMRAT’ விருது, முதலான விருதுகளைப் பெற்றுள்ளார்.

மேலும் இவரது சீரிய தலைமையின் கீழ் NTCகுழுமம் பல மதிப்புமிக்க விருதுகளைப் பெற்றுள்ளது. APOLLO CV Award (2010), CEAT India Road Transportation Award, Mahindra Navistar Transport Excellency Award(2011), EXIM INDIA - Shipping Times-Cargo Logistics Award (2012), Leaders of Tomorrow Award (2012), Best Employee Award (2012) முதலானவை இந்நிறுவனம் பெற்றுள்ள விருதுகளுள் குறிப்பிடத்தக்கனவாகும்.

போக்குவரத்துத் துறையில் திறமையான பணியாளர்களை உருவாக்கவும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் நாமக்கல் நகரில் NTA College Of Transport Education மற்றும் NTC Institute of Driver Training & Research ஆகிய நிறுவனங்களைத் துவக்கி சிறப்புடன் நடத்தி வருகிறார்.

இவருடைய மனைவி திருமதி சௌந்தரம், இவருடைய சாதனைகளுக்குத் துணை நிற்கிறார். இத்தம்பதியருக்கு செல்வி சத்திஸ்ரீ, காவியஸ்ரீ என இரண்டு மகள்கள் உள்ளனர்.

தொலை நோக்குப் பார்வை, கடின உழைப்பு, தொழில் பற்று, உதவும் உள்ளம் போன்ற அருங்குணங்கள் கொண்டு, சரக்குப் போக்குவரத்துத் தொழிலில் சாதனை படைத்து முதல் தலைமுறை தொழிலதிபராக விளங்கும் திரு. க. சந்திரமோகன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. B.சரவணன்

நாமக்கல் மாவட்டம் இராசிபுரம் வட்டம் புதுப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. சி.பாலசுப்பிரமணியன் - திருமதி பி.மல்லிகேஸ்வரி தம்பதியருக்கு மகனாக 1986 ஆம் ஆண்டு பிறந்தவர், திரு. B. சரவணன்.

சேலம் தும்மல் பகுதியில் உள்ள தூய மைக்கேல் மெட்ரிகுலேசன் பள்ளியில் பத்தாம் வகுப்பை 2002 ஆம் ஆண்டில் அதிக மதிப்பெண்கள் பெற்றுத் தேர்ச்சி பெற்றார். சென்னை முகப்பேரில் உள்ள வேலம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு படித்து, 2004 ஆம் ஆண்டு அரசுப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று 12 ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

2008 ஆம் ஆண்டு கோவா வளாகத்தில் அமைந்துள்ள BITS, Pilani தொழில் நுட்ப நிறுவனத்தில் கம்ப்யூட்டர் சயின்ஸ் பிரிவில் பொறியியல் பட்டம் பெற்ற சரவணன், 2008 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை பெங்களூரிலுள்ள SAP Labs மென்பொருள் நிறுவனத்தில் மென் பொருள் பொறியாளராய் மிகச் சிறப்பாகப் பணியாற்றினார்.

அரசுப் பணியில் சேர்ந்து நாட்டுக்கும், சமுதாயத்திற்கும், பிற்படுத்தப்பட்ட மற்றும் நலிந்த மக்களுக்கும் சேவையாற்றிட வேண்டும் என்ற இலட்சிய வேட்கை கொண்டிருந்த இவர், நல்ல சம்பளத்துடன், அனைத்து வசதிகளுடன் வகித்து வந்த பொறியாளர் வேலையை உதறிவிட்டு, சென்னை, அண்ணாநகரில் உள்ள சங்கர் IAS அகாடமியில் இந்தியக் குடிமைப் பணித் தேர்வு எழுதப் பயிற்சி பெறுவதற்காக, சேர்ந்தார். தமிழகத்திலிருந்து நிறைய இளைஞர்கள் இந்தியக் குடிமைப்பணிகளுக்கான IAS, IPS, IFS, IRS போன்ற தேர்வுகளில் வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கத்துடன், சென்ற ஆண்டு

‘கொங்கு சாதனையாளர்’ விருது பெற்ற திரு.டி.சங்கர் அவர்களால் நடத்தப்பட்டுவருவது ‘சங்கர் IAS Acadamy’ என்பது குறிப்பிடத்தக்கது.

அயரா உழைப்பு, தன்னம்பிக்கை, கடுமையான பயிற்சி, அறிவாற்றல் முதலானவற்றை முதலாகக் கொண்டு, குடிமைப் பணித்தேர்வு எழுதிய சரவணன் முதல் முயற்சியிலேயே அகில இந்திய அளவில் 100– வது Rank பெற்றுச் சாதனை புரிந்துள்ளார். இதன் மூலம் IFS பணிக்குத் தேர்வு பெற்ற சிறப்புக்குரியவர் இவர்.

‘முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை’, ‘முயற்சி திருவினையாக்கும்’ போன்ற சான்றோர் பொன்மொழிகளுக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாய்த் திகழ்கிறார், திரு.சரவணன். இவர் கல்லூரியில் படித்த காலத்திலிருந்தே எழுத்தாற்றலும், சொல்லாற்றலும் கொண்டு விளங்கி வருகிறார். ‘Talk Your Way to Japan’ தமிழ்ப் பேச்சுப் போட்டியில் பங்கு கொண்டு முதல் இடத்தைப் பிடித்து, ஜப்பான் நாட்டிற்குச் சென்று வந்தவர் இவர்.

முதல் முயற்சியிலேயே குடிமைப் பணி தேர்வில் பங்கு கொண்டு, அகில இந்திய அளவில் 100 வது Rank பெற்று, IFS பணியில் சேர்ந்து சாதனை படைத்து, கொங்கு சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துள்ள ஆற்றலாளரும், தமிழ் ஆர்வலருமான திரு. B.சரவணன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘ கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு சாதனையாளர்



## திரு. T. பூபாலன்

2012 ஆம் வருடம் நடைபெற்ற இந்திய குடிமைப் பணித் தேர்வின் மூலம் இந்திய வருவாய்ப் பணிக்குத் (Indian Revenue Service) தேர்ந்தெடுக்கப்பட்டவர் திரு. T. பூபாலன்.

இவர் திருப்பூர் மாவட்டம், உடுமலை வட்டம் கரட்டுமடம் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். இவரது தந்தை திரு.தண்டபாணி ஓய்வு பெற்ற பள்ளித் தலைமை ஆசிரியர். தாய் திருமதி சண்முகவள்ளி குடும்பத் தலைவி. இவருடைய சகோதரி பிரியதர்சினியின் கணவர் திரு.முத்துக்குமார பார்த்திபன் ஒரு தொழிலதிபர்.

கோயம்புத்தூர் PSG தொழில்நுட்பக் கல்லூரியில் கம்ப்யூட்டர் சயின்ஸ் பிரிவில் 2009 ஆம் ஆண்டு பொறியியல் பட்டம் பெற்ற திரு.பூபாலன், Honeywell மற்றும் TCS ஆகிய மென்பொருள் நிறுவனங்களில் மூன்று வருடங்கள் மிகச்சிறப்பாகப் பணிபுரிந்துள்ளார்.

சிறு வயதில் இருந்தே பல்வேறு சமூக இயக்கங்களில் பங்குபெற்று வந்துள்ளார். பள்ளி நாட்களில் சாரணர் இயக்கத்தில் ஆளுநர் விருது பெற்றுள்ளார். NCC எனும் தேசிய மாணவர் படையில் சிறந்த மாணவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். துப்பாக்கிச் சுடுதலில் வல்லவரான இவர் பல பரிசுகள் பெற்றுள்ளார். கல்லூரியில் மாணவர்ப் பேரவைத் தலைவராகச் சிறப்பாக பணியாற்றி உள்ளார். B.E. தேர்தலில் அதிக மதிப்பெண்கள் பெற்றுச் சிறப்பிடம் பெற்றவர் இவர்.

கோவை PSG தொழில்நுட்பக் கல்லூரியில் இறுதியாண்டில் இவரது ப்ராஜெக்ட் இரத்ததானம் செய்யும் கொடையாளிகளை இரத்தம் தேவைப்படும் அவசர நேரத்தில் எளிதாகவும் விரைவாகவும் தொடர்பு கொள்வதன் மூலம் நேரத்தை மிச்சப்படுத்தி, பல உயிர்களைக் காக்க உதவுவது ஆகும். இது சிறந்த ப்ரொஜக்ட் விருது பெற்றதோடு கோவை மாநகரில் பல மருத்துவமனைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும் கல்லூரி பருவத்தில் இருந்தே பல அரசு சாரா நிறுவனங்களில் சேவையாற்றும் நோக்கத்துடன் அவற்றின் நற்பணிகளில் பங்கு பெற்றுள்ளார். அவற்றில் ஏழைக் குழந்தைகளின் கல்விக்கு உதவுதல், அழிந்து வரும் அரிய வகை கடல் ஆமைகளைப் பாதுகாத்தல் மற்றும் மீனவ கிராமங்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இவற்றில் சிறந்த பங்கு பெற்றமைக்காகப் பல விருதுகள் பெற்றுள்ளார்.

TCS நிறுவனத்தின் மூலம் அமெரிக்காவில் நல்ல சம்பளத்தில் பணிபுரிய வாய்ப்பு கிடைத்தும், அதை ஏற்காமல் குடிமைப் பணித்தேர்வு எழுதி, தன் 24வது வயதில் முதல் முயற்சியிலேயே வெற்றி பெற்றார்.


ஒரு நேர்மையான, திறமையான அரசு அதிகாரியாக நாட்டிற்கும் சமுதாயத்திற்கும் சேவை செய்வதே இவரது இலட்சியம்.

தன்னம்பிக்கை, அயரா உழைப்பு, அறிவுத்திறன், மாணவர்ப் பருவத்திலிருந்தே தலைமைப் பண்புகள், சாதிக்க வேண்டும் என்ற இலட்சியம் போன்றவை வெற்றிக் கதவை நிச்சயம் திறக்கும் என்பதற்குச் சிறந்த உதாரணமாய்த் திகழ்கிறார், திரு. பூபாலன். இந்தியக் குடிமைப்பணி தேர்வுகள் எழுதும் கொங்குச் சமுதாய இளைஞர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் திகழ்கிறார். பொறியியல் பட்டம் பெற்றுள்ள, திறமையான மாணவர்கள் இந்தியக் குடிமைப்பணித் தேர்வு எழுதி, வெற்றி பெறுவதற்கு, இவர் ஓர் ஊக்க சக்தியாகவும் விளங்குகிறார்.

கொங்குச் சமுதாயம் முன்னேறிட, திறமைக்கும் உழைப்பிற்கும் பேர் பெற்ற நம் இளைஞர்கள், இந்தியக் குடிமைப் பணி தேர்வுகளில் அதிக அளவில் பங்கு கொண்டு, பலர் வெற்றிபெற வேண்டும் என்பது நமது சங்கத்தின் நோக்கங்களில் ஒன்று.

அதற்கேற்ப, இந்தியக் குடிமைப் பணித் தேர்வில் முதல் முயற்சியிலே வெற்றி பெற்று IRS பணிக்குத் தேர்வு பெற்ற சாதனைக்காக, திரு.T.பூபாலன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# வெளிநாட்டு கொங்கு சாதனையாளர்



## டாக்டர். சின்னியா சுப்பிரமணியன்

கோவை மாவட்டம் சோமனூர், கோம்பக் காட்டுப்புதூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சின்னிய கவுண்டர் – திருமதி சுப்பாத்தாள் தம்பதியரின் மகனாக 1959 ஆண்டு பிறந்தவர், கனடா நாட்டில் வெற்றிக் கொடி நாட்டி வருபவரும், கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்க்கும் வகையில் சாதனை புரிந்துள்ளவருமான டாக்டர் சின்னியா சுப்பிரமணியன்.

தனது ஆரம்பப் படிப்பை கோம்பக் காட்டுப்புதூர் துவக்கப்பள்ளியிலும், மேல்நிலைப் படிப்பை வாழைத் தோட்டத்து அய்யன் மேல்நிலைப் பள்ளிலும் படித்தார். சிறுவயது முதலே அறிவியல் மற்றும் கணிதத்தின் மேல் மிகுந்த ஆர்வம் உடையவராய் விளங்கியதால், ஸ்ரீ இராமகிருஷ்ணா பாலிடெக்னிக்கில் பொறியியல் பயின்று முதல் மாணவனாய்த் தேர்ச்சி பெற்றார். B.Eng(Honors ) படிப்பை 1981 ஆம் ஆண்டு கோவையிலுள்ள P.S.G தொழில் நுட்பக் கல்லூரியிலும், M.Eng(Metallurgy) படிப்பை 1983 ஆம் ஆண்டு பெங்களூரிலுள்ள Indian Institute of sciences நிறுவனத்திலும், Ph.D படிப்பை 1989 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா நாட்டிலுள்ள மெல்போர்ன் பல்கலைக் கழகத்திலும், M.B.A படிப்பை கனடா நாட்டிலுள்ள மேற்கு ஒன்ட்டாரியோ பல்கலைக்கழகத்திலும் வெற்றிகரமாக முடித்து, பட்டங்கள் பெற்றார்.

1991 ஆம் ஆண்டு 1997 ஆம் ஆண்டு வரை ஆஸ்திரேலியா, அடிலெய்டு நகரிலுள்ள தெற்கு ஆஸ்திரேலியா( University of South Australia ) பல்கலைக் கழகத்தில் Section Manager, Research Fellow, Senior Research Fellow ஆகிய பொறுப்புகளில் சிறப்பாகப் பணியாற்றினார். 1998 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவிலுள்ள James Cook University of North Queensland என்ற பல்கலைக் கழகத்தில் Senior Lecturer in Materials Engineering ஆகப் பணியாற்றினார். ஆசிரியராகவும், ஆய்வாளராகவும், தொழில் ஆலோசகராகவும் சிறந்து விளங்கினார்.

1999 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை கனடா நாட்டின் Westaim Corporation நிறுவனத்தில் Surface Engineered Products Division - R & D.

Metallurgy -தலைவராய்ப் பொறுப்பேற்றுச் சிறப்பாகப் பணியாற்றினார். 2004 ஆம் ஆண்டிலிருந்து தற்போதுவரை Black Cat Blades Ltd என்ற புகழ்வாய்ந்த கனடா நாட்டு நிறுவனத்தில் R & D, Metallurgy தலைவராய் மிகச் சிறப்புடன் செயலாற்றி வருகிறார்.

மூன்று புத்தகங்கள், நான்கு காப்புரிமைப் பட்டயங்கள் உட்பட 120 க்கும் மேற்பட்ட, தரமான ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். APEGA Registered Professonal Engineer, Alberta, Canada மற்றும் ASM Internation USA - Chair, Edmonton Chair(2011) ஆகிய அமைப்புகளுடன் இணைந்து செயல்படும் சிறப்புக்குரியவர்.

ASM Internation என்ற புகழ்பெற்ற அமைப்பின் தீவிர உறுப்பினராக உள்ளார். ASM-IIM Fellowship இரண்டு முறை பெற்ற பெருமைக்குரியவர். ஆஸ்திரேலியாவில் உள்ள இந்தியர் ஒருவருக்கு இரண்டு முறை இந்த Fellowship கொடுத்து கௌரவப்படுத்தியது இதுவே முதல் முறையாகும், WEAR என்ற பன்னாட்டுத் தொழில்நுட்ப இதழின் ஆசிரியர் குழுவில் ஒருவராக உள்ளார்.

$1200^0$ C வெப்பத்தைத் தாங்கக் கூடிய உலோக முலாம் பூசும் தொழில் நுட்பத்தைக் கண்டறிந்து உலகுக்கு அறிமுகப் படுத்தியவர் இவர். தேய்மானம் பற்றிப் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ள இவர், தற்போது மண்ணில் தேயும் பொருட்களைத் தேயாமல் இருக்க, தமது ஆராய்ச்சியைக் கடந்த 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து செய்து வருகிறார்.

கனடா நாட்டில் ஆல்பெர்டா, எட்மாண்டன் நகரில் உள்ள ‘Edmonton Tamil Cultural Association’ என்ற தமிழ்ப் பண்பாட்டுச் சங்கத்தில் தன்னைத் தீவிரமாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். கனடாவில் ஐந்து இலட்சம் தமிழர்கள் தற்போது வசித்து வருகின்றனர். டொராண்டோ, வேன்கோவர் போன்ற பெரிய நகரங்களில் தமிழர்கள் அதிக அளவில் வசித்து வருகின்றனர். அல்பெர்ட்டா மாகாணத்தின் தலை நகரான எட்மாண்ட்டன் நகரில் ஏராளமான தமிழர்கள் தற்போது உள்ளனர். எட்மண்ட்டோன் தமிழ்ப் பண்பாட்டுச் சங்கத்தின் (ETCA) செயல்பாடுகளுக்கு இவர்கள் பெருமளவில் உதவி செய்து வருகின்றனர்.

1990 ஆம் ஆண்டு கனடா நாட்டுக்குச் சென்றது முதல் ETCA அமைப்பின் ஆயுள் உறுப்பினராய் Dr. சின்னியா சுப்பிரமணியன் அவர்கள் இருந்து வருகிறார். தீபாவளித் திருநாள், பொங்கல் விழா, பேட்மிண்டன் விளையாட்டு நிகழ்ச்சி, குழந்தைகளுக்குத் தமிழ்ப் பள்ளி, பாட்டு மற்றும் நடன நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் ETCA செயல்பாடுகளில் தீவிரப் பங்கெடுத்து வருகிறார். பட்டிமன்றத்தில் இவரது பங்கு அனைவராலும் வரவேற்கப்படுகிறது; பெரிதும் பாராட்டப்படுகிறது. தமிழ்ச் சங்கத்திற்காக நிறைய நன்கொடைகளைப் பெற்றுத் தந்து, சங்கத்தின் நிதி நிலைமையை மேம்படுத்தியதில்

இவருக்குப் பெரும் பங்குண்டு. கடந்த நான்கு ஆண்டுகளாக ETCA நிர்வாகிகளை ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கும் தேர்தல் அலுவலராகவும் பணியாற்றி, தன்னுடைய பணிகளைச் செம்மையாகச் செய்து முடித்துள்ளார்.

இவருக்கு திருமதி இலட்சுமி என்ற மனைவியும், திரு.அஜந்த், திரு.சரவணன் என்ற இரு மகன்களும் உள்ளனர். திருமதி லட்சுமி மென்பொருள் பொறியாளராகவும், திரு.அஜந்த் மருத்துவ மாணவராகவும், திரு.சரவணன் கட்டுமானத்துறைப் பொறியாளராகவும் உள்ளனர். அனைவரும் பிறந்த மண்ணின்மேல் பாசமும் நேசமும் கொண்டவர்கள்.

தமிழகத்தின் குக்கிராமத்தில் எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்து, கோவை, பெங்களூர், மெல்போர்ன், (ஆஸ்திரேலியா), ஒன்ட்டாரியே (கனடா) ஆகிய நகரங்களில் உள்ள புகழ்பெற்ற பல்கலைக் கழகங்களில் பெருமை மிகு பட்டங்கள் பல பெற்று, மூன்று ஆஸ்திரேலியப் பல்கலைக் கழகங்களில் பேராசிரியராய், ஆய்வு வழிகாட்டியாய், ஆலோசகராய் மிகச் சிறப்பாகப் பணியாற்றி, கனடா நாட்டின் புகழ்வாய்ந்த பிளாக் கேட் பிளேட்ஸ் லிமிடெட் நிறுவனத்தின் உலோகவியல் (ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி) துறையின் தலைவராய்த் தற்போது மிகச் சிறப்பாகப் பணியாற்றிவருபவர் டாக்டர் சின்னியா சுப்பிரமணியம். சமுதாய உணர்வு மிக்க கொண்டு, கனடா நாட்டிற்கு வரும் கொங்குச் சொந்தங்களுக்குத் தன்னால் இயன்ற உதவிகளை மகிழ்வுடன் செய்து வருகிறார்.

இத்தகைய சிறப்புகள் கொண்டதோடு தமிழகத்திற்கு, குறிப்பாகக் கொங்குச் சமுதாயத்திற்குப் பெரும் பெருமை சேர்த்துள்ள டாக்டர் சின்னியா சுப்பிரமணியம் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘வெளிநாடு கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டி மகிழ்கிறது.

# கொங்கு வேளாண் சாதனையாளர்



## திரு. எஸ்.எல்.பாலசுப்ரமணியம்

கோவை மாவட்டம், சூலூர் ஒன்றியத்திலுள்ள சுண்டமேடு என்ற சிறிய கிராமத்தில் திரு. என். லிங்கப்பகவுண்டர் – திருமதி சின்னம்மாள் தம்பதியருக்கு மகனாக 1944 ஆம் ஆண்டு பிறந்தவர், திரு. எஸ்.எல்.பாலசுப்ரமணியம்.

ஐந்தாம் வகுப்புவரை சென்னப்ப ரெட்டி புதூர் ஆரம்பப் பள்ளியிலும், SSLC வரை அன்னூர் அரசு உயர்நிலைப் பள்ளியிலும் படித்து முடித்த பின்னர், விவசாயத்தில் தீவரமாக ஈடுபட்டார். காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து தொண்டாற்றினார். பெருந்தலைவர் காமராசர் தலைமையில் தொடங்கப்பட்ட ஸ்தாபன காங்கிரஸ் கட்சியின் சேர்ந்து சூலூர் வட்டாரச் செயலாளராய்ப் பணியாற்றினார். 1969 ஆம் ஆண்டு திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் தலைமையில் தொடங்கப்பட்ட விவசாயச் சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, விவசாயிகளின் மேம்பாட்டிற்காகப் பாடுபட ஆரம்பித்தார்.

விவசாயிகள் சங்கம் நடத்திய பல போராட்டங்களில் கலந்து கொண்டு, சிறைக்குச் சென்றுள்ளார். விவசாயிகள் சங்கப் போராட்டக் குழு உறுப்பினராக இவர் முக்கியப் பங்காற்றினார். பெருந்தலைவர் காமராசர், K.N. குமாரசாமி, ஆர். செங்காளியப்பன், நாராயணசாமி நாயுடு, கணபதி கிருஷ்ணசாமி கவுண்டர் முதலான தலைவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்ற இவர், அவர்களின் அன்பையும் நம்பிக்கையையும் பெற்றிருந்தார். காமராஜர் அவர்களைச் சொந்த ஊரில் நடைபெற்ற மாபெரும் பொதுக் கூட்டத்திற்கு அழைத்து வந்ததில் இவருக்குப் பெரும் பங்குண்டு.

நாராயணசாமி நாயுடு அவர்களின் மறைவுக்குப் பின், உழவர் உழைப்பாளர் கட்சியில் சேர்ந்து, சொல்லேர் உழவர் கு.செல்லமுத்து அவர்களுடன் இணைந்து விவசாயிகளுக்காகக் குரல் கொடுக்கத் தொடங்கினார். படிப்படியாக, பல பொறுப்புகளில்

பணியாற்றி, தற்போது கோவை மாவட்ட உழவர் உழைப்பாளர் கட்சித் தலைவராகவும், தமிழக விவசாயிகள் சங்கத்தின் கோவை மாவட்டத் தலைவராகவும் சிறப்பாய்ப் பணியாற்றி வருகிறார்.

வாகராயன் பாளையம் அரசுமேல்நிலைப் பள்ளியில் பெற்றோர் - ஆசிரியர் கழகத் தலைவராய்க் கடந்த **15** ஆண்டுகளாக மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார். இப்பள்ளியின் வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றி வருகிறார். சுற்றுப்புறச் சூழல், இயற்கை விவசாயம் முதலானவற்றில் மிக்க ஈடுபாடு கொண்டு, மானிசாண்டுபி நிறுவனத்தின் B.T ரக விதை நாற்றங்காலை அழித்தல், தொழிற்சாலைகளால் நிலம், நீர் மாசுபடுவதை எதிர்த்தல் போன்ற போராட்டங்களில் பங்குகொண்டு, விவசாயிகளின் நலன்களுக்காகத் தீவிரமாகப் பாடுபட்டார்.


கொங்கு சமுதாயத்தைச் சேர்ந்த விவசாயிகளுக்கு தற்போது பெரும் பிரச்சினையாக உள்ளது, தங்கள் பிள்ளைகளுக்குத் தகுந்த வரன்களைத் தேர்ந்தெடுத்து உரிய காலத்தில் திருமணம் செய்து வைப்பதுதான். இதைக் கருத்தில் கொண்டு இவரது பண்ணையிலேயே திருமணத் தகவல் நிலையம் ஒன்றை இலவசமாக நடத்தி வருகிறார். அதன் மூலம் பல திருமணங்களை நடத்தி வைத்துள்ளார்.

இவரது விவசாயப் பண்ணை இவர் ஒரு சிறந்த விவசாயி, குறிப்பாக இயற்கை விவசாயத்தில் பற்றுக் கொண்டவர் என்பதற்குச் சான்றாக உள்ளது. இவருக்கு திரு. பா. குமரலிங்கம், திரு.பா. கார்த்திகேயன் என இரண்டு மகன்களும், செல்வி திரிவேணி என்ற மகளும் உள்ளனர்.

ஒரு உழைப்பாளியாய், ஒரு விவசாயியாய், விவசாயச்சங்கத் தலைவராய், விவசாயிகளின் குழந்தைகளின் கல்வி வசதி மேம்பாட்டிற்குப் பாடுபடும் நோக்கத்துடன் அரசுப் பள்ளியின் பெற்றோர் - ஆசிரியர் கழகத் தலைவராய், விவசாயிகளின் வேதனைக் குரலை மாற்றப் பாடுபடும் கொங்குச் சமுதாயப் பண்பாளராய் விளங்கும் திரு. S.L.பாலசுப்பிரமணியம் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு வேளாண் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்கள்





**திரு. சு.புவனேஷ் - திரு. சு.தினேஷ்குமார்**

திருப்பூர் மாவட்டம், குண்டடம், ருத்ராபதி கிராமத்தைச் சேர்ந்த திரு.வி.இ.சுப்பராயன் – திருமதி பிரேமா தம்பதியரின் மகன்கள் திரு.புவனேஷ் சுப்பராயன் மற்றும் திரு. தினேஷ் குமார். புவனேஷ் 25 வயது நிரம்பிய, திருமணம் ஆனவர்.மனைவி பெயர் திருமதி திவ்யாஆர்த்தி. தினேஷ் 23 வயது நிரம்பியவர். குடும்பத்தொழில் குவாரி. தந்தை ஸ்பின்னிங் மில் தொடங்க ஆலோசனை கூறினார்.

இருப்பினும் ஆஸ்திரேலியா, சிட்னி நகரில் ‘e Bay’ என்ற நிறுவனத்தில் பொறியாளராய் மூன்றரை ஆண்டுகள் பணியாற்றிய திரு. புவனேஷ், சென்னைக்குக் குடிபெயர்ந்தார். டோனட் ஹவுஸ் என்ற நிறுவனத்தைச் சகோதரர் திரு. தினேஷ் குமார் துணையுடன் தொடங்கினார். அதுவரை, டோனட் யாரும் விரும்பிச் சாப்பிடாத உணவுப் பொருளாகவே இருந்தது.

டோனட் என்பது வட்ட வடிவில் பண் போன்ற தோற்றம் அளிக்கக் கூடியது. இது கோதுமை மற்றும் மைதா மாவுகளின் கலவையுடன் செய்யக் கூடியவை. டோனட் அமெரிக்க, ஆஸ்திரேலியா போன்ற நாட்டு மக்களின் சிற்றுண்டி ஆகும். டோனட் சாக்லேட், சர்க்கரை, சீஸ், பட்டர், கஸ்டர்ட் போன்ற வகைகளில் கிடைக்கிறது. இது சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை ரசித்துச் சாப்பிடக் கூடிய உணவுப்பொருள். இந்த அரிய வகை உணவு தென்னிந்திய மக்களுக்குக் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே இந்த இரண்டு சகோதரர்களும் சேர்ந்து இத்தொழிலைத் தொடங்கினர். இப்போது சென்னையில் மட்டும் மாதத்திற்கு 54000 டோனட்களை இவர்களுடைய நிறுவனம் தயாரித்து வழங்குகிறது. சென்னையில் மட்டும் ஏழு இடங்களில் டோனட் நிறுவனம் கிளைகளை அமைத்துள்ளது.

ஐதராபாத், கொச்சி போன்ற நகரங்களில் Donut House விரைவில் கிளைகளைத் தொடங்க உள்ளது. இந்த வெற்றியைப் பெற்றிட பல தடைகளைத் தாண்ட வேண்டியிருந்தது. கடுமையாக உழைக்க வேண்டியிருந்தது. டோனட் தயாரிப்பிற்கு

வேண்டிய மெசின்கள், கருவிகள், தொழில் நுட்பங்கள் போன்றவற்றைப் பெற்றிட திரு.புவனேஷ் சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்குப் பலமுறை சென்று, முயற்சியில் சிறிது சிறிதாக வெற்றி பெற்றார். 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சென்னையில் முதல் டோனட் ஹவுஸ் விற்பனை மையம் எழும்பூர் எத்திராஜ் கல்லூரி எதிரில் திறக்கப்பட்டது. அதே மாதம் எக்ஸ்பிரஸ் அவென்யு வணிக வளாகத்தில் இவர்களின் முதல் கிளை துவக்கப்பட்டது.

சரியான ரெசிப்பி கண்டுபிடிக்க இவர்கள் மிகவும் சிரமப்பட வேண்டியிருந்தது. டோனட்டில் முட்டை சேர்க்கக் கூடாது என்று இவர்கள் முடிவெடுத்திருந்ததால், மேலும் சிரமப்பட வேண்டியிருந்தது. முதலில் இவர்கள் இருவரையும் சேர்த்து எட்டுபேர் மட்டுமே இந்நிறுவனத்தில் இருந்தனர். காலை 8 மணிக்குக் கடையைத் திறந்து, இரவு 12 மணிக்கு மேல்தான் கடையிலிருந்து வெளிவர முடிந்தது. உழைப்பு, விடாமுயற்சி, தன்னம்பிக்கை, திறமை ஆகியவற்றை முதலீடாகக் கொண்டு, வங்கியில் கடன் வாங்கித் துவக்கப்பட்ட தொழில், இன்று ஆல்போல் தழைத்து வந்துள்ளது. மக்களின் அமோக வரவேற்பை டோனட் பெற்றுள்ளதற்குக் காரணமாக இவர்கள் கூறுவது உயர்ந்த தரமும், அருமையான சுவையும் ஆகும்.

தற்போது ரெசிப்பி பொறுப்பை மும்பையிலுள்ள ஒரு பெல்ஜியம் நிறுவனத்திற்குக் கொடுத்துள்ளனர். ஒவ்வொரு மாதமும் சுமார் மூன்றரை டன் கலவையை அவர்கள் மும்பையில் தயாரிக்கிறார்கள். சென்னையில் இவர்கள் செய்யவேண்டியதெல்லாம் புளிப்புநுரை, வெண்ணெய் மற்றும் தண்ணீரைத் தேவையான அளவு சேர்ப்பதுமட்டும் தான்.

DONUT HOUSE இன்று சென்னையில் பிரபலமாக உள்ளது. தொழிலும் வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது. போதிய வருமானம் கிடைக்கிறது. 'முயற்சி திருவினையாக்கும்' என்பதற்குச் சிறந்த உதாரணமாக இந்தச் சகோதரர்கள் விளங்குகின்றனர் என்றால் அது மிகையல்ல. 'CIRCLE OF SUCCESS' என்ற தலைப்பில் இந்து நாளிதழ் இவர்களுடைய வெற்றிப் பயணத்தை விவரித்து எழுதிப் பாராட்டியுள்ளது.

'நம்மால் முடியும்' என்ற தாரக மந்திரத்திற்கேற்ப, புதுமையான தொழிலான 'DONUT HOUSE' தொடங்கி, பலரும் பாராட்டும் வண்ணம் சாதனை படைத்துள்ள இந்த இளம் தொழிலதிபர்கள் திரு. புவனேஷ் சுப்பராயன், திரு. தினேஷ் குமார் சகோதரர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

## 2013 ஆம் ஆண்டு 10–ஆம் வகுப்பு அரசு தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

### முதல் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | K.R.பொன் சிவசங்கரி |
| த/பெ | : | C.கதிர்வேல் |
| ஊர் | : | பொங்காலி வலசு, ஈரோடு |
| பள்ளி | : | EHKN Mat. Hsr. School, M.Palayam |
| மதிப்பெண் | : | 498/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் முதல் இடம். |

### முதல் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | D.தீபா |
| த/பெ | : | M.துரைசாமி |
| ஊர் | : | அத்தனூர், நாமக்கல் |
| பள்ளி | : | SRV HITECH MHSS RASIPURAM. |
| மதிப்பெண் | : | 497/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் இரண்டாம் இடம். |

### முதல் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | S. யசோதா |
| த/பெ | : | E.செல்வராஜ் |
| ஊர் | : | வயலங்காடு, ஏமாப்பள்ளி |
| பள்ளி | : | AVVAI SR M S TIRUCHENGODE |
| மதிப்பெண் | : | 497/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் இரண்டாம் இடம். |

### முதல் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | M.V. பவித்ரா |
| த/பெ | : | M.வரதராஜன் |
| ஊர் | : | சென்னிமலை, ஈரோடு. |
| பள்ளி | : | கொங்கு வேளாளர் மெட்ரிக் பள்ளி |
| மதிப்பெண் | : | 497/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் இரண்டாம் இடம். |

## இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | T.அஜித் |
| த/பெ | : | தமிழரசு |
| ஊர் | : | செட்ரப்பட்டி, தர்மபுரி. |
| பள்ளி | : | கொங்கு மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி |
| மதிப்பெண் | : | 496/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் மூன்றாம் இடம், மாவட்ட அளவில் முதல் இடம். |

## இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | S.மணிராஜ் |
| த/பெ | : | சுப்பிரமணியம் |
| ஊர் | : | பெரியாகவுண்டம்பாளையம் |
| பள்ளி | : | குறிஞ்சி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி. |
| மதிப்பெண் | : | 496/500 |
| சிறப்புத் தகுதி | : | மாநிலத்தில் மூன்றாம் இடம் |

## மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | A. ஷதர்சினி |
| த/பெ | : | S.அர்த்தனாரீஸ்வரன் |
| ஊர் | : | கூடுதுறை, நாமக்கல். |
| பள்ளி | : | R.N.OXFORD MATRICULATION SCHOOL |
| மதிப்பெண் | : | 495/500 |
| சிறப்புத் தகுதி | : | கொங்கு சமூகத்தில் மூன்றாம் இடம். |

**2013** ம் ஆண்டில் நடைபெற்ற **10** ம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் கலந்துகொண்டு கொங்கு இன மாணவர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றதைப் பாராட்டி, சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

## 2013 ஆம் ஆண்டு 12–ஆம் வகுப்பு அரசு தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

### முதல் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | C.காவ்யா |
| த/பெ | : | A.சண்முகம் |
| ஊர் | : | சாந்தோம், சென்னை. |
| பள்ளி | : | ரோசரி மெட்ரிக்குலேசன் |
| மேல்நிலைப் | | பள்ளி, சென்னை |
| மதிப்பெண் | : | 1192/1200 |
| சிறப்புத் தகுதி | : | மாநில அளவில் முதல் இடம் |

### இரண்டாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | K.சந்தியா |
| த/பெ | : | மா.கருணாகரன் |
| ஊர் | : | கணேசபுரம், நாமக்கல். |
| பள்ளி | : | GREENPARK MHSS NAMAKKAL |
| மதிப்பெண் | : | 1188/1200 |
| சிறப்புத் தகுதி | : | மாநில அளவில் இரண்டாம் இடம். |

### மூன்றாம் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | C.R.விக்னேஷ் ராம் |
| த/பெ | : | ரவிச்சந்திரன் |
| ஊர் | : | முத்துகாபட்டி, நாமக்கல் |
| பள்ளி | : | அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, பாச்சல் |
| மதிப்பெண் | : | 1186/1200 |
| சிறப்புத் தகுதி | : | கொங்கு சமுதாயத்தில் மூன்றாம் இடம் |

**2013** ம் ஆண்டில் நடைபெற்ற **12** ம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் கலந்துகொண்டு கொங்கு இன மாணவர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றதைப்பாராட்டி, சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

## சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

**07–07–2013** அன்று நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில்
கலந்துகொண்டு பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 1 | Shotput (Boys)<br>16 - 20 Years | I டீ.பிரதீஷ்<br>II ஆர்.ரகு<br>III எஸ்.கலைவண்ணன் |
| 2 | Shotput (Boys)<br>21 to 30 Years | I எம்.வெங்கடேசன்<br>II எஸ்.திராஜ்<br>III எம்.வினோத்குமார் |
| 3 | Shotput (Men)<br>31 to 40 Years | I கே.எஸ்.ராம்மோகன்<br>II கே.என்.தர்மராஜ்<br>III எஸ்.சரவணன் |
| 4 | Shotput (Men)<br>41 to 50 Years | I ஆர்.சிவசெல்வம்<br>II இ.கே.பாலசுப்பிரமணியம்<br>III ரவிகுமார் |
| 5 | Shotput (Men)<br>51 to 60 Years | I ராஜாமணி<br>II எஸ்.அன்பழகன்<br>III எம்.ராமசாமி |
| 6 | Shotput (Men)<br>61 and above | I ஆர்.பூபதி<br>II கே.ராசப்பன்<br>III கே.எஸ்.சுப்ரமணியம் |
| 7 | Running Race (Boys)<br>LKG & UKG 25 Metres. | I கார்த்திக்<br>II லிங்கேஷ்<br>III ரித்திக் ஈஸ்வர் |
| 8 | Running Race<br>I & II Std. (Boys) 25 Metres | I எஸ்.பி.விஜயராஜ கோபாலன்<br>II சபரிஷ்<br>III விஷ்வா |

| | | | |
|---|---|---|---|
| 9 | Running Race<br>50 Metres (Boys)<br>III & IV Std. | I<br>II<br>III | பிரணவ்<br>ராகுல்<br>சக்திவேல் |
| 10 | Running Race<br>75 Metres (Boys)<br>V & VI Std. | I<br>II<br>III | எஸ்.சுந்தர்<br>எஸ்.அகிலன்<br>டி.எம்.இளவரசன் |
| 11 | Running Race<br>200 Metres (Boys)<br>VII & VIII Std. | I<br>II<br>III | ஜி.நித்தின்<br>சிபி ஆகாஷ்<br>கிர்சாந்த் |
| 12 | Running Race<br>400 Metres (Boys)<br>IX & X Std. | I<br>II<br>III | எஸ்.தமிழ் செல்வன்<br>பி.பிரேம்<br>பி.ஆகாஷ் விஜய் |
| 13 | Running Race<br>200 Metres (Boys)<br>16 to 20 Years | I<br>II<br>III | பிரேம் ஆனந்த்<br>ரகு சாந்த்<br>கதிரவன் |
| 14 | Running Race<br>200 Metres (Boys)<br>21 to 30 years | I<br>II<br>III | ஆர்.உதயகுமார்<br>எம்.வினோத் குமார்<br>கே.வடிவேல் கண்ணன் |
| 15 | Running Race<br>100 Metres (Men)<br>31 to 40 years | I<br>II<br>III | ஜே.ஜி.அருண் ராஜா<br>பி.தனசேகர்<br>கே.அன்பழகன் |
| 16 | Running Race<br>100 Metres (Men)<br>41 to 50 years | I<br>II<br>III | பி.சேகர்<br>பி.இளங்கோ<br>துரைசாமி |
| 17 | Running Race<br>100 Metres (Men)<br>51 to 60 years | I<br>II<br>III | எம்.ராமசாமி<br>டி.நடராஜ்<br>எஸ்.லோகநாதன் |
| 18 | Running Race (Men)<br>Above 60 years | I<br>II<br>III | கே.ராசப்பன்<br>அண்ணாமலை<br>பழனிசாமி |

| | | | |
|---|---|---|---|
| 19 | Ball Throw (Girls)<br>III & IV Std. | I<br>II<br>III | மிர்துவர்ஷினி<br>லக்ஷிதா<br>பிரீதிகா லக்ஷ்மி |
| 20 | Ball Throw (Girls)<br>V & VI Std. | I<br>II<br>III | எம்.பி.பிரிதிகா<br>கார்த்திகா<br>ஸ்ரீஅமோகா |
| 21 | Ball Throw (Girls)<br>VII & VIII Std. | I<br>II<br>III | சர்னிதா<br>டி.தீபிகா<br>கீர்த்தனா |
| 22 | Ball Throw (Girls)<br>IX & X Std. | I<br>II<br>III | ஹோவிதா<br>காவியா<br>நர்மதா |
| 23 | Ball Throw (Girls)<br>16 to 20 years | I<br>II<br>III | பிரியங்கா சதாசிவம்<br>டி.மனிஷா<br>ஷில்பா |
| 24 | Ball Throw (Girls)<br>21 to 30 years | I<br>II<br>III | கே.பிரியதர்ஷினி<br>ஆர். செல்ல கிரித்திகா<br>சசிகலா |
| 25 | Ball Throw (Women)<br>31 to 40 years | I<br>II<br>III | லட்சுமி<br>கே.எஸ்.அமுதா<br>வசந்தி |
| 26 | Ball Throw (Women)<br>41 to 50 years | I<br>II<br>III | சாவித்திரி சீனிவாசன்<br>ராணி<br>பரமேஸ்வரி |
| 27 | Ball Throw (Women)<br>51 to 60 years | I<br>II<br>III | ஜெயமணி<br>கே.கலைச்செல்வி<br>ஆர். சரிஜா |
| 28 | Ball Throw (Women)<br>61 and above | I<br>II<br>III | நீலா<br>பார்வதி<br>எம்.நல்லம்மாள் |

| | | | |
|---|---|---|---|
| 29 | Running Race (Girls)<br>25 Metres<br>LKG & UKG | I<br>II<br>III<br>IV<br>V<br>VI | தனிஷா<br>மோனிகா<br>ப்ரனௌவி<br>அக்ஷரா<br>சுகிதா வர்ஷினி<br>ஜோசிகா |
| 30 | Running Race (Girls)<br>25 Metres<br>I & II Std | I<br>II<br>III<br>IV<br>V<br>VI | நிகாரிகா<br>சாதனா<br>பிரீத்தி<br>தன்வி<br>ஹரினி<br>பிரித்திகா லக்ஷ்மி |
| 31 | Running Race (Girls)<br>50 Metres<br>III & IV Std | I<br>II<br>III | மிருது வர்ஷினி<br>நந்தனா<br>நக்ஷத்ரா |
| 32 | Running Race (Girls)<br>50 Metres<br>V & VI Std | I<br>II<br>III | இ.ஐஸ்வர்யா<br>உஷா நந்தினி<br>லக்ஷிதா |
| 33 | Running Race (Girls)<br>75 Metres<br>VII & VIII Std | I<br>II<br>III | கீர்த்தனா<br>தீபிகா<br>சர்னிதா |
| 34 | Running Race (Girls)<br>100 Metres<br>XI & X Std | I<br>II<br>III | எம்.பி.அமிர்த சுருதி<br>ஜி.நர்மதா<br>ஆர்.நிமிதா |
| 35 | Running Race (Girls)<br>100 Metres<br>16 & 20 years | I<br>II<br>III | பிரியங்கா சதாசிவம்<br>ஆர்.மனுமிதா<br>டி.மோனிஷா |
| 36 | Running Race (Women)<br>100 Metres<br>21 & 30 years | I<br>II<br>III | எஸ்.பத்ம பிரியா<br>எஸ். ரோஹினி<br>வி.செல்வி |

| | | | |
|---|---|---|---|
| 37 | Running Race (Women)<br>100 Metres<br>31 & 40 years | I<br>II<br>III | பி.சத்திய பிரியா<br>வசந்தி<br>மணிமேகலை |
| 38 | Running Race (Women)<br>100 Metres<br>41 to 50 years | I<br>II<br>III | சாவித்திரி சீனிவாசன்<br>கே.ஜெயமணி<br>எம். சாந்தி |
| 39 | Running Race (Women)<br>100 Metres<br>51 to 60 years | I<br>II<br>III | பி.மகேஸ்வரி<br>லக்ஷ்மி<br>கலைச்செல்வி |
| 40 | Running Race (Women)<br>100 Metres<br>61 & Above | I<br>II<br>III | நீலா<br>வீரம்மாள்<br>பழனியம்மாள் |
| 41 | Couples Ball Catching | I<br>I<br>II<br>II | சுந்தரம்<br>பரமசிவம்<br>தேவராஜ்<br>லோகேஷ்வரன் |
| 42 | Lucky Corner ( Men ) | I<br>II<br>III | நிர்மல் குமார்<br>கோபி சங்கர்<br>எஸ்.லோகநாதன் |
| 43 | Lucky Corner ( Women ) | I<br>II<br>III | எஸ்.பத்மபிரியா<br>காயத்திரி<br>தமிழ்ச் செல்வி |

## கயிறு இழுக்கும் போட்டி

| | **WINNER** (Team - A) முதலிடம் | | **RUNNER** (Team - C) இரண்டாமிடம் |
|---|---|---|---|
| 1. | பி.இளங்கோ | 1. | ஜி.சுகந்த் |
| 2. | கே.சரவணா | 2. | பி.ஜெகதீஸ் |
| 3. | கே.அன்பழகன் | 3. | டி.கே.தேவராஜ் |
| 4. | கே.வடிவேல் குமார் | 4. | பி.சேகர் |
| 5. | கே.கே.ரமேஷ் | 5. | பி.எம்.பாண்டியன் |
| 6. | பரணி.கே.பாலசுப்பிரமணி | 6. | பி.தனசேகர் |
| 7. | எஸ்.அன்பழகன் | 7. | எஸ்.ரவிகுமார் |
| 8. | ஆர்.சிவசெல்வம் | 8. | எஸ்.சிவசாமி |
| 9. | எஸ்.சரவணன் | 9. | ஜி.ஆறுசாமி |
| 10. | எம்.அண்ணாமலை | 10. | எம்.வெங்கடேசன் |
| 11. | லோகேஷ்வரன் | 11. | எம்.தாமோதரசாமி |
| 12. | கே.பாலசுப்பிரமணியன் | 12. | பி.லோகேஸ் |
| 13. | கே.என்.தர்மராஜ் | 13. | டி.பிரத்தீஸ் |
| 14. | சி.கதிரவன் | 14. | பிரேம் ஆனந்த் |

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

23–06–2013 அன்று வெள்ளி விழா இல்லத்தில் நடந்த பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான போட்டிகளில் பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ. எண். | போட்டியின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| | **நடனப்போட்டி** | |
| 1. | 5 – 10 வயது வரை | 1 எம்.பி.பிரித்திகா |
| | | 2 எம்.பி.அமிர்தசுருதி |
| | | 3 எஸ்.என்.வேதிகா |
| | | 3 கே.என்.பிரனௌவ் ராஜன் |
| | **பாட்டுபோட்டி** | |
| 2. | 5 – 8 வயது வரை | 1 எம்.பி.பிரித்திகா |
| | | 2 எம்.பி.அமிர்தசுருதி |
| | | 3 ஜி.ஏ.நக்ஷத்திரா |
| | | 3 டி.சாதனா |
| | **பேச்சுப்போட்டி** | |
| 3. | 5 – 10 வயது வரை | 1 டி.தீபிகா |
| | | 2 ஜி.ஏ.நக்ஷத்திரா |
| | | 3 ஸ்ரீரஞ்சனி |
| | **கட்டுரை** | |
| 4. | | 1 ஜி.ஏ.நக்ஷத்திரா |
| | | 2 எம்.பி.அமிர்தசுருதி |
| | | 3 டி.தீபிகா |
| | **கவிதை** | |
| 5. | | 1 எம்.பி.பிரித்திகா |
| | | 2 டி.தீபிகா |
| | | 3 எம்.பி.அமிர்தசுருதி |
| | **ஓவியப்போட்டி** | |
| 6. | 5 – 9 வயது வரை | 1 எஸ்.நந்தனா |
| | | 2 ஜி.ஏ.நக்ஷத்திரா |
| | | 3 எ.தன்வி |
| | | 3 எஸ்.பி.விஜயராஜ கோபாலன் |

| | | |
|---|---|---|
| | | 3 ஆர்.கார்த்திகா |
| | | 3 எஸ்.சக்திவேல் |
| | | 3 எல்.ஹரினி |
| | | 3 டீ.எம்.இளவரசன் |
| | | 3 கே.என்.ப்ரனௌவ் ராஜன் |
| | | 3 எஸ்.என்.வேதிகா |
| | 10 வயதுக்கு மேல் | 1 எம்.பி.அமிர்தசுருதி |
| | | 2 டி.தீபிகா |
| | | 3 எம்.பி.பிரித்திகா |
| | | 3 ஆர்.நிமிதா |
| | | 3 டீ. லோகபிரியா |

**மாறுவேடப்போட்டி**

| | | |
|---|---|---|
| 7. | | 1 டி.சாதனா |
| | | 2 எஸ்.சக்திவேல் |
| | | 3 ஜி.ஏ.அக்ஷரா |
| | | 3 ஆர்.கார்த்திகா |
| | | 3 ஜி.மகிலன் சின்னசாமி |

**கோலப் போட்டி**

| | | |
|---|---|---|
| 8 | | 1 சித்ரா ரவிக்குமார் |
| | | 2 கே.பிரியதர்ஷினி |
| | | 3 பூர்ணிமா தேவி |
| | | 3 மனோரஞ்சிதம் |

**வினாடி – வினா ? போட்டி**

| | | |
|---|---|---|
| 9. | குறிஞ்சி அணி | (முதல் பரிசு) |
| | | 1. எம்.பி.அமிர்தசுருதி |
| | | 2. டீ.எம்.இளவரசன் |
| | முல்லை அணி | (இருண்டாம் பரிசு) |
| | | 1. டி.தீபிகா |
| | | 2.எஸ்.எஸ்.சிவரஞ்சனி |
| | நெய்தல் அணி | (மூன்றாம் பரிசு) |
| | | 1. கே.பிரியதர்ஷினி |
| | | 2. எஸ்.என்.வேதிகா |